பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 24 திங்கட்கிழமை (07-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:132



ஈராக்கின் கர்பாலா நகரில் அதிபர் சதாம்ஹுசைனின் பிரமாண்டமான உருவப் படம் ஒன்றை சுத்தியல் கொண்டு தாக்கிச் சேதப்படுத்தும் அமெரிக்கப் போர் வீரர் ஒருவரை படத்தில் காணலாம்.

## வெடிவிபத்தில் போராளி வீரச்சாவு!

யாழ்ப்பாணம்,ஏப்.7

... 22ஆம் திகதி ... வெடி விபத்தில் ... சாருமதி என்பவர் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தனங்களப்பு, சாவகச்சேரியைச் சொந்த இடமாகவும் பாலியாறு வெள்ளாங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இவரது இயற்பெயர் உமாதேவி செல்வநாயகம்.

இந்த மாவீரரின் உருவப்படம் நாளை செவ்வாய்க்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு தற்காலிக இல்லத்திலிருந்து உருவப் படம் பொறுப்பேற்கப்பட்டு பூரண இரா

(14ஆம் பக்கம் பார்க்க)



பக்தாத் நகரின் தென்கிழக்கே டுவாரா என்ற இடத்தில் தாங்கள் தாக்கி அழித்த அமெரிக்க டாங்கி ஒன்றின் மீது ஏறி ஆடிப்பாடும் ஈராக்கிய வீரர்கள்.

# ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் தமிழக முதல்வரை இன்று சந்திப்பார்

கொழும்பு,ஏப்.7

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இந்தியா புறப்பட்டுச் செல்கின்றார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து சென்னை செல்லும் ஜனாதிபதியை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இன்று காலை ஆளுநர் மாளிகையில் வரவேற்பார். ஜனாதிபதியுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்தியா செல்கிறார்.

ஜனாதிபதி குமாரதுங்க இன்று இரவு புதுடில்லி புறப்படுவார். அங்கு அவர் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை முதலில் சந்திப்பார்.

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள், ஈராக் போர் உட்பட பல முக்கிய விவகாரங்கள் பற்றி இந்தியத் தலைவர்களுடன் அவர் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வியாழக்கிழமை இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமையும் ஜனாதிபதி சந்திப்பார். துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோருடனும் சந்திரிகா பேச்சு நடத்துவார். (ஐ-9)

# 'லங்கா முடித' துருப்புக்கள் கப்பல் மீது உண்மையிலேயே தாக்குதல் நடந்ததா?

## பாதுகாப்பு ஆய்வாளர் எழுப்பும் சந்தேகம்

கொழும்பு,ஏப்ரல்7

**கடந்த திங்கட்கிழமை இரவு துருப்பினரை ஏற்றிச்சென்ற 'லங்கா முடித' கப்பல் திருகோணமலைக் கடற்பரப்பில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை நிரூபிக்கும் திட்டவட்டமான ஆதாரங்களோ, சாட்சியங்களோ கிடைக்கவில்லை என்று பாதுகாப்புத்துறை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.**

கடந்த திங்கட்கிழமை இரவு ஆயிரத்து 700 துருப்புக்களை ஏற்றிக் கொண்டு சென்ற 'லங்காமுடித' கப்பல் மீது திருகோணமலைக் கடற்பகுதியில் வைத்துத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதல்லவா?

அப்படித் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாகக் கூறுவதே சந்தேகத்துக்குரியது என்கின்றார் பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ்.

இந்தச்சம்பவம் குறித்து நடைபெற்ற உயர்மட்ட விசாரணைகளில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது என்பதை நிரூபிக்கும் ஆதாரங்களோ, தகவல்களோ, சாட்சியங்களோ, கிடைக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

சம்பந்தப்பட்ட சம்பவத்தில் படையினர் மூவர் சூட்டுக்கு இலக்கானதாகவும் தாக்குதல் நடத்தியோர் மீது கப்பலில் இருந்த படையினர் திருப்பித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சீ.ஐ.டியினர் விசாரணைகளால் இதுவரை எந்தப் பயனும் இல்லை

### காணாமற்போனோரின் பெற்றோர் அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஏப்.7

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சீ.ஐ.டியினர் கொழும்பிலிருந்து அடிக்கடி வருகின்றனர். ஆனால், அந்த விசாரணைகளால் இதுவரை உருப்படியாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம், நேற்று நீதி அமைச்சருக்கு அனுப்பி வைத்த மகஜர் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பாதுகாவலர் சங்க உறுப்பினர்களின் கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

நீதி அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஆறு வருடங்களாக கொழும்பிலிருந்து சி.ஐ.டியினர் யாழ்ப்பாணம்வந்து கைதானோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டுவிட்டுச் செல்கின்றார்கள். இது மிகவும் துக்ககரமான செயலாக, இன்றுவரை எதுவித பயனும் அற்றதாகவே உள்ளது.

இதனை நீதி அமைச்சோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ கவனத்தில் எடுத்து எமக்கு நீதி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்விடயம் தொடர்பாகப் பேசுவதற்காக எமது சங்கப் பிரதிநிதிகள் 7 பேர் கொழும்பு வருவதற்கு எண்ணியுள்ளோம். இதற்கான காலநேரத்தினை எமக்கு விரைவில் அறியத்தரவும்.

தங்களுடனான சந்திப்பின்போது நாம் பாதுகாப்பு அமைச்சின் செயலர், சட்டமா அதிபர் முதலானோரையும் சந்தித்துப் பேச ஆர்வம் கொண்டுள்ளோம் இதற்கும் ஒழுங்கு செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## பரீட்சை பெறுபேறு கையடக்க தொலைபேசி மூலமும்

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளை கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அறிந்துகொள்ள முடியுமென்று பரீட்சைத் திணைக்களம் தெரிவிக்கிறது.

'டயலொக்' தொலைபேசியின் எஸ்.எம்.எஸ். இணைப்புகள் மூலம் பரீட்சை முடிவுகளை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8434 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு EXAMS என்ற எழுத்துக்களையும், விண்ணப்பதாரிகளின் சுட்டிலக்கத்தையும் பதிவு செய்தால், 5 விநாடிகளில் பரீட்சை முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியுமென்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-9)

## 'சார்ஸ்' நோய் தொற்றிய இருவர் இலங்கை வருகை

### நோய் பரவாதிருக்க தடுப்பு நடவடிக்கை

தெற்காசிய நாடுகள் பலவற்றில் பரவிவரும் 'சார்ஸ்' என்னும் கொடிய காய்ச்சல் நோய் இலங்கையில் பரவாதிருக்க தடுப்பு நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இந்நோய் தொற்றிய இருவர் இலங்கைக்கு வந்தது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இந்நோய்க்கான அறிகுறிகள் எவருக்காவது காணப்பட்டால் அது குறித்து உடனடியாக அறிவிக்கும்படி சுகாதார அதிகாரிகளுக்கு அமைச்சு அறிவித்திருக்கிறது. இலங்கை வரும் வெளிநாட்டவர்கள் எவருக்காவது இந்நோய் தொற்றியிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஏற்பாடுகள் கட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர்பற்றி மீண்டும் இங்கு விசாரணை!

### ஆணைக்குழு அதிகாரிகள் வருவர்

யாழ்ப்பாணம்,ஏப்.7

வடபகுதியில் கடந்த 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 3 தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட -

(14ஆம் பக்கம் பார்க்க)

# பொதுவான தீர்வுத்திட்டம் குறித்து அரசு - பொ.ஐ.முன்னணி ஆராய்வு

கொழும்பு,ஏப்.7

சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கம் உட்பட பொதுவான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் இணைந்து உருவாக்கும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய உயர்மட்டப் பேச்சின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

இனப்பிரச்சினை தொடர்பாகவும், நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை ஸ்திரப்படுத்துவது தொடர்பாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஏப்ரல் முதலாம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுடனும் தொடர் சுற்றுப்பேச்சுகளை நடத்தினார்.

அதனையடுத்து முன்னாள் அமைச்சர் கதிர்காமருடன் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

அடுத்த கட்ட சமாதானப் பேச்சின் போது அரசினால் முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டத்தில், 2000ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திருத்தத்தில் முன்வைக்கப்பட்டிருந்த ஆலோசனைகள் சிலவும் இடம்பெறலாம் என நம்பப்படுகிறது. (எ)

# சாவகச்சேரிப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளதாகவும் -

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் தாம் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள நிலையத்தில் நாய்களுக்குத் தடுப்பு மருந்து பெற்றுக் கொள்ளுமாறும் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

நாளை கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த மிருசுவில் வடக்கு சனசமூக நிலையம், மன்னன்குறிச்சி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் -

ஏப்ரல் 11ஆம் திகதி வரணி பிரிவைச் சேர்ந்த டெமியன் ப.நோ.கூ.சங்கக் கிளைக்கடை, மாசேரி சனசமூக நிலையம், வரணி இயற்றாலை சனசமூகநிலையம் ஆகியவற்றிலும் -

ஏப்ரல் 22ஆம் திகதி கைதடி பிரிவைச் சேர்ந்த குமரநகர், சைவ ஐக்கிய சனசமூக நிலையம், கைதடி சந்தி ஆகியவற்றிலும் -

ஏப்ரல் 24ஆம் திகதி சரசாலைப் பிரிவில், மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம், மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலையம், சரசாலை கிராம சபை அலுவலகம் ஆகியவற்றிலும -

மே மாதம் இரண்டாம் திகதி நாவற்குழிப் பிரிவில் நாவற்குழி மத்தி சன சமூக நிலையம், நாவற்குழி கிராம சபை அலுவலகம் ஆகியவற்றிலும -

மே மாதம் ஆறாம் திகதி சாவகச்சேரியில், டச்சுவீதி பூவேந்தன் பாலர் பாடசாலை, கச்சாய் வீதி, லிகோரியார் தேவாலயம் ஆகியவற்றிலும -

ஏப்ரல் இருபதாம் திகதி சாவகச்சேரி நகரசபை அலுவலகம், நுணாவில் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் -

தடுப்பூசி மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# அடகு நகை மீளளிப்பு

தென்மராட்சி,ஏப்.7

மக்கள் வங்கியின் சாவகச்சேரி, பளை ஆகிய கிளைகளில் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் தங்க நகைகள் அடகுவைத்து கடந்த 2003 ஜனவரி மாதம் வரை மீளப் பெறுவதற்கு பணம் செலுத்தியோரின் நகைகள் இன்று தொடக்கம் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பணம் செலுத்தியோரின் நங்க நகைகள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாக வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(ஒ-117)

# மானுடத்தின் தமிழ் கூடல் திருமலையில் நாளை ஆரம்பம்

திருகோணமலை,ஏப்.7

கலை பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மானுடத்தின் தமிழ்கூடல் நிகழ்வாக இசை, நடன, நாடகவிழா நாளை செவ்வாய்க்கிழமை திருகோணமலை, உவர்மலை விவேகானந்தக்கல்லூரிக கலையரங்கில். ஆரம்பமாகின்றது.

நாளை முதல் ஐந்து தினங்கள் தினமும் மாலை 4மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். இந்த விழாவை யொட்டி விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் தலைமையிலான குழு. விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நாளைய நிகழ்வுகள் தேசியக் கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல், விழாச்சுடர் ஏற்றல், அக வணக்கம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகின்றன.

இந்த நிகழ்வுகளில் வ.விக்னேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துவார். திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் காவடி நடனம், சாஹித்திய இசைப் பேரரசு எம்.வி.என்.நவரத்தினத்தின் பாட்டுக் கச்சேரி, பேராசிரியர் எதிர் வீரசரச்சந்திரவின் 'மனமே' நாடகம் ஆகியன இடம்பெறும்.

எம்.ஐ.ஏ.ஜபார் தலைமையில் இடம்பெறும் முதல்நாள் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா சி.இளம்பரிதியின் சிறப்புரை, இளைய தம்பி தயானந்தாவின் கருத்துரை ஆகியனவும் இடம்பெறும்.

(ஒ-3-290)

## மலையகப் பாடசாலைகளில்

# விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போதிக்க இந்தியாவிலிருந்து 60 பட்டதாரி ஆசிரியர்கள்

கொழும்பு,ஏப்.7

மலையகத்திலுள்ள தேசியக் கல்லூரிகள், மகா வித்தியாலயங்களில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போதிக்கவென இந்தியாவிலிருந்து 60 பட்டதாரி ஆசிரியர்கள் இலங்கை வரவுள்ளனர் என மத்திய மாகாண கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் நேற்றுத் தெரிவித்தார்.

இன்னும் ஒரு சில வாரங்களில் இலங்கை வரும் இந்த ஆசிரியர்களுக்கான சம்பளத்தை இந்திய அரசாங்கம் வழங்குமெனவும் அவர் சொன்னார்.

மலையகப் பாடசாலைகளில் நீண்ட காலமாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருகிறது. இதன் காரணமாக பல்கலைக் கழகங்களில் மருத்துவபீடத்துக்கு மலையக மாணவர்கள் செல்ல முடியாத நிலையுள்ளது.

இக்குறையைப் போக்கவே இந்தியாவிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களின் சேவைகளைப் பெறுகின்றோம் என்றும் அமைச்சர் இராதாகிருஷ்ணன் சொன்னார். (எ)

# சுதந்திரக் கட்சியுடனான இணக்கம் ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே!

## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.7

சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. எந்த வகையான இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டாலும் அது மிகக் குறுகிய காலத்துக்கு மட்டுமே என்று ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா பத்திரிகைப் பேட்டியொன்றில் தெரிவித்திருக்கிறார்.

இந்த நாட்டில் சோஷலிஸ சமூக மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதே ஜே.வி.பியின் பொறுப்பாகும் என்றும் சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான ஒரு குறிக்கோள் இல்லையெனவும் அவர் பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து அமைக்கப்போகும் அரசு மிகக் குறுகிய கால குறிக்கோளை அடைவதற்கான ஒன்றா என வினவப்பட்ட பொழுது இவ்வாறு விளக்கியிருக்கும் ரில்வின் சில்வா மேலும் கூறியிருப்பதாவது:-

"வேறு ஓர் அரசியல் அமைப்புடன் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கே செயலாற்ற முடியும். மீண்டும் பதவிக்கு வரும் தேவையே சுதந்திரக் கட்சிக்கு உண்டு.

"நாமும் சுதந்திரக் கட்சியினரும் தனித்தனியே பயணம் செய்யும் அதேவேளை, உருவாகியிருக்கும் பொதுவான நிலைக்கு ஒன்றாக முகங்கொடுப்போம். கொஞ்சத் தூரம் சென்ற பின்னர் இன்னும் கொஞ்சத் தூரம் செல்ல முடியுமாயின் நாம் அத் தூரத்திற்கும் செல்வோம். அந்த இடத்தை அடைந்த பின்னர் மேலும் கொஞ்சத் தூரம் செல்ல முடியுமாயின் செல்வோம்" -

இவ்வாறு அவர் சொன்னார்.(எ)



தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலிக் கிளை, நேற்று திருநெல்வேலி மத்திய சந்தைக்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் டி.எம்.சுவாமிநாதன், புதிதாக கணக்கை ஆரம்பித்த வாடிக்கையாளர் ஒருவருக்கு அதற்குரிய சான்றிதழை வழங்குவதை முதல் படத்திலும் அங்கு அவர் உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்:வசந்தன்)*

# புத்தளத்தில் சமாதானத்தை ஏற்படுத்த பிரமுகர்கள், பொலீஸார் அடங்கிய குழு

## பெரிய பள்ளிவாசல் கூட்டத்தில் தீர்மானம்

புத்தளம்,ஏப்.7

புத்தளம் பகுதியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பலம்வாய்ந்த சமாதானக் குழுவொன்று ஏற்படுத்தப்படும். இதில் நகரின் முக்கிய பிரமுகர்கள் உள்ளடக்கப்படுவதுடன் பொலீஸாரும் இணைந்துகொள்வர். பூரண அதிகாரங்களும் இக்குழுவுக்கு வழங்கப்படும். கிராம சேவையாளர் பிரிவு தோறும் இரண்டு பொலீஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படுவர்.

அண்மையில் புத்தளம் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சமூக விரோதச் செயல்கள், அசம்பாவிதங்கள் குறித்தும் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் கடந்த 4 ஆம் திகதியன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பெரிய பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத்தலைவர் எஸ்.ஆர்.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வடமேல் மாகாண பிரதி பொலீஸ்மா அதிபர் அசோகா ரட்ணவீர, சிலாபம் பகுதி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி ரணசிங்க, வண்ணாத்திவில்லு பகுதி உதவி பொலீஸ் அத்தியட்சகர் வெலிகொடபிட்டிய, புத்தளம் பொலீஸ நிலைய பொறுப்பதிகாரி எம்.ரத்னாயக்கா மற்றும் அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், வர்த்தகர்கள், புத்திஜீவிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடமேல் மாகாணசபை உறுப்பினர் எம்.ஐ.பி.ஹாபி, சட்டத்தரணி எம்.எம். இக்பால், நகரசபை உறுப்பினர் வை.எம்.நிஸ்த்தார், முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் முஹம்மது பைரூஸ், முன்னாள் நகரசபை உறுப்பினர் எம்.ஐ.எம். ஹாலிது, டாக்டர் மகேஸ் போன்றோர் நகரில் சமாதானம் பேணப்படவேண்டிய அவசியம் குறித்தும், குற்றச் செயல்கள் ஒழிக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இவற்றுக்குப் பதிலளித்து உரையாற்றிய வடமேல் மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் அசோக ரட்ணவீர, 'தாம் இன்றிலிருந்து புத்தளத்தை மீண்டும் ஒரு புனிதபூமியாக மாற்றியமைக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும், தாம் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் சொன்னார். அமைதியை ஏற்படுத்துவதில் பொலீஸார் தமது பங்கை சிறந்த முறையில் ஆற்றுவர் எனவும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் உறுதி கூறினார். (எ)

# குடாநாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் உதவ வேண்டும்!

## தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் உரை

தற்போதைய சமாதான சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அனைத்து வங்கிகளும் தம்மாலான உதவிகளை வழங்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் டி.எம். சுவாமிநாதன்.

தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலி கிளை நேற்று திருநெல்வேலி மத்திய சந்தைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் எஸ்.இராஜமகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் எம்.சுவாமிநாதன், கிளை அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

20 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு நடைபெற்ற யுத்தக் கொடூரங்களால் யாழ். குடாநாட்டு மக்களின் பொருளாதார வளங்கள் சிதைக்கப்பட்டுள்ளன.

சிதைக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு அனைத்துத் தரப்பினருக்குமுண்டு அந்த வகையில் தேசிய சேமிப்பு வங்கியும் தனது சேவையை வழங்குவதற்காக இப்புதிய கிளையை ஆரம்பித்துள்ளது.

எமது தேசிய சேமிப்பு வங்கியானது 1972 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாக மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்றது.

தற்போது நாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகிய இருவருடைய கடுமையான உழைப்பால் சமாதானச் சூழல் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமாதானச் சூழலை நன்றாகப் பயன்படுத்தி ஏனைய பகுதி மக்களுக்கு வங்கிகள் மூலம் கிடைக்கின்ற சலுகைகள், யாழ். குடாநாட்டு மக்களுக்கும் கிடைப்பதற்கு அனைத்து வங்கிகளும் வழிசமைத்துக் கொடுக்கவேண்டும்.

இந்தச் சமாதானம் யுத்தத்தால் நலிவடைந்துள்ள எமது மக்களுக்கு ஒரு விடுதலையைப் பெற்றுக்கொடுக்கும் என நம்புகின்றேன். இதன் பிரதிபலிப்பு இன்று உடனடியாகத் தெரியாது விட்டாலும் சில வருடங்கள் கழிந்த பின்னராவது இதன் தாற்பரியத்தினை அனைவரும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

தற்போது காணப்படுகின்ற சமாதான சூழ்நிலை ஒரு நிரந்தர சமாதானமாக தோற்றுவிக்கப்படுமாயின் எமது மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி சமுதாய ரீதியாகவும் முன்னேற்றம் அடைய முடியும் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், தேசிய சேமிப்பு வங்கி பொது முகாமையாளர் நரந்தகொட, உதவிப் பொதுமுகாமையாளர் லயனல் திஸநாயக்கா, தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் என்.சிவபாலகணேசன், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா உட்பட பலர் இத் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.(ஒ-5)

## ஈராக் போரின் 18ஆவது நாளில்

# பக்தாத் மீது மும்முனைத் தாக்குதல்:

# பதிலடி கொடுப்பதற்கு சதாம் வியூகம்!

பக்தாத்,ஏப்.7

ஈராக் போர் தொடங்கிய 18 ஆவது நாளான நேற்று அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் பக்தாத்தைக் கைப்பற்றும் முயற்சியாக மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தனர். இதற்குப் பதிலடிதர ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் புதிய வியூகம் வகுத்துவருவதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கிடம் உள்ள பேரழிவு ஆயுதங்களை அழிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு போரை ஆரம்பித்த அமெரிக்கா, இதுவரை எந்தப் பேரழிவு ஆயுதங்களையும் கண்டுபிடிக்கவில்லை; அவற்றை அழிக்கவும் இல்லை. ஈராக்கின் பல்வேறு நகரங்களில் உள்ள முக்கிய கட்டடங்களைத்தான் அதிநவீன குண்டுகளை வீசி தரைமட்டமாக்கி வருகின்றது.

தலைநகர் பக்தாத்மீது நேற்று 18ஆவது நாளாக சரமாரியாகக் குண்டுகள் வீசப்பட்டன. பக்தாத் நகரை அமெரிக்க விமானங்கள் குண்டுவீசி சல்லடையாகத் துளைத்துவிட்டன.

அமெரிக்கத் தரைப்படையினர் நேற்றுமுன்தினம் பக்தாத் நகருக்குள நுழைய முயற்சித்தனர்.ஆனால், ஈராகியர்களின் மூர்க்கத்தனமான பதிலடியால் பக்தாத் நகருக்குள் அவர்களால் எண்ணியவேகத்தில் நுழைய முடியவில்லை.



இன்னும் குண்டு விழுமா?

அதனால் முதற்கட்டமாக 20 'அப்ரம்' டாங்கிகளும், 10 அதிநவீன கவச வாகனங்களும் தாக்குதல் நடத்தியபடி நகருக்குள் நுழைய முயற்சிததன.

பக்தாத் நகருக்குள் நுழைய முயற்சிக்கும் அமெரிக்கத் தரைப்படையினருக்கும் அதிபர் சதாம் ஹுசைனின் குடியரசுப் படையினருக்கும் இடையே கடும் சண்டை நடப்பதாகக் கூறப்படுகிறது.

பக்தாத் நகரை முழுமையாகப் பிடிக்க அமெரிக்கப்படைகள் பக்தாத்தின் பல இடங்களில் இருந்தும் தொடர்ந்து முன்னேற முயற்சிக்கின்றனகூடுதலாக அமெரிக்கத் தரைப்படையினர் பக்தாத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை பக்தாத மீது மும்முனைத் தாக்குதலை அமெரிக்கா தீவிரப்படுத்தியது.

தரைப்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியபடி முன்னேறிச் செல்ல, அவர்களுக்கு உதவியாக விமானங்கள் வட்டமடித்துப் பறந்தபடி ஈராக்கின் இராணுவ முகாம்களை நோக்கிச் சரமாரியாகக் குண்டுகளை வீசின; ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குப் பறகு 4 மணித்தியாலங்கள் அமெரிக்க விமானங்கள் குண்டுவீச்சுக்களை நிறுத்தியிருந்தன.தரைப்படையினர் முன்னேறிச்செல்வதற்காக இந்த ஏற்பாடு.நேற்று அதிகாலைமுதல் மீண்டும் குண்டுவீச்சு தொடர்ந்தது.

இந்த நிலையில், பக்தாத்தை அமெரிக்கப் படைகளிடம் இருந்து காப்பாற்ற அதிபர் சதாம் ஹுசைன், பக்தாத்தில் ஒரு ரகசிய இடத்தில் அவசர ஆலோசனை நடத்தினார். பக்தாத்துக்குள் நுழைந்த அமெரிக்கப் படையினருக்குப் பதிலடி கொடுப்பது பற்றியும், போரின் புதிய வியூகம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

சதாமின் படைத்தளபதிகள், முக்கிய அதிகாரிகள், சதாமின் 2 மகன்கள் ஆகியோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இது ஒருபுறமிருக்க, ஈராக்கின் வடக்குப் பகுதியில் உள்ள மோசல் நகரில் அமெரிக்கப் படையின் உதவியுடன் குர்திஷ் படைகள் முன்னேறிச் சென்றதாகவும் -

சதாமின் குடியரசுப் படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தியதில் அமெரிக்க, குர்திஷ் படையினர் மோசல் நகரில் இருந்து பின்வாங்கிவிட்டதாகவும் -

கூறப்படுகிறது.

பக்தாத் நகரில் அமெரிக்க விமானங்கள் விடியவிடிய குண்டு வீசுவதைத் தொடர்ந்து இரவுநேரத்தில் பயணஞ் செய்யவேண்டாமென்று பொது மக்களுக்கு ஈராக் அரசு தடை விதித்துள்ளது. மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரை பக்தாத் நகரை விட்டு வாகனங்கள் வெளியே செல்லக்கூடாது.நகருக்குள் வாகனங்கள் நுழையவும்கூடாது என்று அரசு தடை உத்தரவு பிறப்பித்திருப்பதாக ஈராக் தொலைக்காட்சி தெரிவித்தது.

(ஒ)



சுட்டுவிடாதீர்கள்....
ஆஸ்பத்திரிக்கு போகிறேன்...

## அமெரிக்க விமானங்களின் 'சேம் சைட்' தாக்குதல்!

### ஏராளமானோர் உயிரிழப்பு

பக்தாத்,ஏப்.7

தமது தரப்பினர் மீதே அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் பலர் உயிரிழந்தனர்.

வடக்கு ஈராக்கில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. அமெரிக்க விசேட அதிரடிப் படையினரின் வாகனத் தொடரணி ஒன்றின் மீதே அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித்தாக்குதல் நடத்தின. சுமார் 8 வாகனங்கள் அடங்கிய இத்தொடரணியில் சதாமுக்கு எதிராக கிளர்ச்சி செய்து வரும் குர்திஷ் இனத்தவர்களும், பிபிஸி. செய்தி ஆசிரியர் ஜோன் சிம்சன் என்பவரும், அமெரிக்கப் படையினரும் பயணித்தனர்.

இத்தொடரணியில் ஈராக் படையினர் செல்வதாக நினைத்த அமெரிக்க விமானிகள் அவ்வாகனங்கள் மீது சரமாரியாகக் குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இதில் காயமடைந்த பி.பி.ஸி. செய்தி ஆசிரியர் ஜோன் சிம்சன் கூறுகையில்,

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஏராளமான சடலங்களைத் தாம் கண்டதாகவும் -

குர்திஷ் இன சிரேஷ்ட அரசியல் தலைவர் ஒருவர் இதில் படுகாயமடைந்ததாகவும் -

தமது தரப்பினர் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய படுமோசமான தாக்குதல் இதுவென்றும் -

தெரிவித்தார்.

(ஒ)

உலக அரங்கில்

## அயோத்தி தமக்கே சொந்தமென்று பௌத்தமத அமைப்பு மனுத்தாக்கல்

### தீராத பிரச்சினையில் மேலும் சிக்கல்

புதுடில்லி,ஏப்.7

இந்தியாவின் அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்துக்கு பௌத்தர்களும் உரிமை கோரியுள்ளனர். அந்த இடத்தைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி பௌத்த அமைப்பொன்று அலகாபாத் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

பௌத்த சங்கத்தின் தலைவர் உதித் ராஜ் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். வரலாற்று உண்மைகள் மற்றும் சீன யாத்ரீகர்களின் குறிப்புகளை ஆதாரமாக அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைக்குரிய இடத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது ஏற்கனவே இந்துக்களும், முஸ்லிம்களுக்கும் இடையே நடந்துவரும் வழக்கில் எங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் மனுவில் கூறியுள்ளார்.

அயோத்தி பௌத்தர்கள் வாழ்ந்த நகரமாகும். இங்கு 3000 புத்த பிக்குகள் இருந்தனர். தற்போது பாபர் மசூதி அமைந்துள்ள இடம் பௌத்தர்களுக்குச் சொந்தமானது என்று உதித்ராஜ் தெரிவித்தார். இந்தியா மீது பாபர் படையெடுத்து வந்த பிறகு 50 ஆண்டுகள் கழித்து ராமசரிதத்தை துளசிதாசர் எழுதினார். அயோத்தியில் கோயில் இடிக்கப்பட்டு, அங்கு மசூதி கட்டப்பட்டதாக அவர் ராமசரிதத்தில் குறிப்பிடவில்லை.

தற்போது நீதிமன்ற உத்தரவின்படி, பிரச்சினைக்குரிய இடத்தில் அகழ்வு ஆய்வுப்பணி நடக்கிறது. அங்கு இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களைப் பார்க்கும் போது, அங்கு பௌத்தர்களின் கட்டடம் இருந்தது என்று தெரிகிறது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மனு மீதான விசாரணை இன்று நடைபெறும்.

இராமர் பிறந்த இடமென இந்துக்களும், பாபர் மசூதி இருந்த இடமென முஸ்லிம்களும் அயோத்தியின் சர்ச்சைக்குரிய இடத்தை உரிமை கோருகின்றனர். இந்த நிலையில் பௌத்தர்களின் மனுப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

(ஒ)

### அகழ்வில் சிலை கண்டுபிடிப்பு

அயோத்தி,ஏப்.7

அயோத்தியில் நடைபெற்ற அகழ்வுப் பணியின்போது சிலை பீடம், சுடுமண் சிற்பங்கள் மற்றும் அலங்கரிக்கப்பட்ட கற்கள் கிடைத்தன என்று தொல்லியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக ஓரிடத்தில் பூமியைத் தோண்டும் பணி துவங்கியுள்ளது. பூமியைத் தோண்டும் பணியில் 8 இஸ்லாமியர்கள் உட்பட 89 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அயோத்தியின் சர்ச்சைக்குரிய இடம் யாருக்கு உரியது என்பதைத் தீர்மானிக்க நீதிமன்ற ஆணைப்படி அங்கு அகழ்வாராட்சி நடத்தப்படுகிறது.

## 'சார்ஸ்' நோயின் காரணி சீனாவில் கண்டுபிடிப்பு

பெய்ஜிங்,ஏப்.7

'சார்ஸ்' நோய்க்குக் காரணமான கிளாமிடியா போன்ற ஒரு பக்டீரியாவை சீன மருத்துவர்கள் குழு கண்டுபிடித்துள்ளது.

'சார்ஸ்' நோயாளிகள் 5 பேரின் உடல்களில் இருந்து இந்த பக்டீரியாவை மருத்துவர்கள் பிரித்தெடுத்துள்ளனர். இந்த பக்டீரியாதான் 'சார்ஸ்' நோய்வர முக்கிய காரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவில் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குநர் லீபிங் தெரிவித்ததாக சீனப் பத்திரிகை கூறுகிறது.

'சார்ஸ்' நோய் மிக மோசமாக பாதிக்கப்பட்ட சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உலக சுகாதார அமைப்பின் 5 நிபுணர்கள் வந்துள்ள நிலையில் இந்தப் புதிய பக்டீரியா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க்கு இதுவரை உலகம் முழுவதும் 84 பேர் பலியாகியுள்ளனர். 2ஆயிரத்து 353பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ)

## ஈராக்கில் இடைக்கால அரசு நாளை அமைக்கப்படுமாம்!

வாஷிங்ரன்,ஏப்.7

பக்தாத் நகரை முழுமையாகப் பிடிக்காத நிலையில் ஈராக்கில் புதிய இடைக்கால அரசு அமைக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. நாளை இந்த புதிய அரசு அமைக்கும் பணி தொடங்க உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

சிவில் நிர்வாகம், மறுசீரமைப்பு ஆகியவை தொடர்பாக அமெரிக்க, பிரிட்டிஷ் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

ஏற்கனவே உம்காசர் துறைமுக நகரை கடந்த வாரம் அமெரிக்க கூட்டுப்படை கைப்பற்றியது. அந்த நகரம் அமெரிக்க கூட்டுப்படையின் பராமரிப்பில்தான் இருக்கிறது.

## கணக்குப்பிள்ளை தேவை

1. சகல விதமான கடைக்கணக்குகளும் ஆங்கிலம், தமிழ் மூலம் எழுதத் தெரிந்திருக்க வேண்டும்.
2. ஆங்கில அறிவு உள்ளவராக இருக்க வேண்டும்.

சகல சுயவிவரங்களுடனும் கீழ்க் குறிப்பிடும் விலாசத்துக்கு நேரில் வரவும்.

இல.68, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம். (16437)

## வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்மன் ஆலய விழா உபயகாரர்
## ஆலோசனைக் கூட்டம்

| | | |
|---|---|---|
| காலம் | :- | 2003-04-12 சனிக்கிழமை |
| இடம் | :- | மேற்படி ஆலய மண்டபம் |
| நேரம் | :- | பிற்பகல் 1மணி 30நிமிடம் |

முக்கிய கவனிப்பு:- திருவிழாக்களின் சங்கற்பகாரர்கள் தவறாது சமுகந்தரவும்.

தகவல் கொடுப்பவர்:
(16400) தற்போதுள்ள மேற்படி ஆலய தர்மகர்த்தா.

## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
25.03.2003 முதல் 14.04.2003 வரை
சகல வகையான புடைவைகளையும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## மைடன் புடைவை நிலையம்

(C/27179) 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381


## 8ஆம் திகதிக்கு முன் தீர்வின்றேல் தொடர்ச்சியான வேலை நிறுத்தம்

அரச மருத்துவர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு நாளை 8 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வுகிடைக்காவிடின் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் மேற்கொள்வதென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை அரச மருத்துவர்கள் மேற்கொண்ட ஒருநாள வேலை நிறுத்தத்தை அடுத்தே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.(-3)

## சாவகச்சேரியில் நிவாரண விநியோகம்

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி பல நோகூச. கிளைக் கடைகளில் நிவாரண உணவு முத்திரையின் 111 ஏ, பி இலக்க புள்ளிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் - எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் நிவாரணத்தை பெற்றுக்கொள்ளுமாறும் சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (எ-113)


## திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்

**O/L Day Class**

ஆரம்பம்: 09.04.2003
புதன் காலை 9.00 மணி. (16433)

Beacon - வெலிங்டன் சந்தி
நியூட்டன் - ஆரியகுளம் சந்தி


## பாராட்டுகின்றோம்



தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பதவி உயர்வில் பாதிக்கப்பட்ட எமக்கு பதவி உயர்வுகளைப் பெற்றுத்தந்த

கௌரவ இந்து கலாசார அமைச்சர்
**T.மகேஸ்வரன்**

அவர்களையும் அவருடன் இணைந்து இதனைப் பெறுவதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி முன்னோடியாகச் செயற்பட்ட

**திரு. S.செல்வராஜா**

அவர்களையும் மனமாரப் பாராட்டுவதோடு, அவர்கள் எல்லாம் வல்ல சந்நிதி முருகன் துணையுடன் நீடூழி காலம் சீரும் சிறப்பும் பெறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

- பதவி உயர்வு பெற்ற
பருத்தித்துறைசாலை ஊழியர்கள்.
(16430)


## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
01.04.2003 முதல் 13.04.2003 வரை
சகல விதமான புடைவைகளை மிகக்கூடிய மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

## வளர்மதி புடைவை அகம்

(176) 258, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(16188)


## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி

**திருமதி தமிழேந்தி கண்ணன்**

அவர்களின் தந்தையார்

**குமாரசாமி தம்பிஐயா**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- கோப்பாய் ஆசிரிய
கலாசாலைச் சமூகத்தினர்.
(16409)


மீண்டும் சாவகச்சேரியில்!

## அம்பாள் பார்மசி அன்ட் குறோசறி

நிகழும் சித்திரபானு வருஷம் பங்குனித் திங்கள் 07.04.2003 இன்று காலை 9.30 - 10.30 வரை உள்ள சுபவேளையில் இல.01, நவீன சந்தை கட்டடத்தில் மீண்டும் இந்நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### எம்மிடம்

- ஆங்கில மருந்து வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- பால்மா வகைகள்
- குறோசறி பொருள்கள்

என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**AMBAL PHARMACY & GROCERY**
*No.01, NEW MARKET BUILDING,*
*CHAVAKACHCHERI.* T.P. : 070 213313
***Branch:*** SRI AMBAL PHARMACY & GROCERY
222/2, Main Street, Manipay. (16412)


## 45ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு : 03.09.1929
உதிர்வு : 22.02.2003

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்

**திரு. க.சற்குணராசா**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசம்மா கனகசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த 45ஆம் நாளில் அவரது ஆத்மா சாந்தியடையவும் அன்னாரது குடும்பத்தார் ஆறுதலடையவும் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.
- ஊழியர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்.
(16373)


## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!

மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

ஜம்பர் வகைகள்
பட்டுச் சாறி வகைகள்
ஸ்கேட் அன் பிளவுஸ்
சல்வார் கமீஸ்
கவுண் வகைகள்
பேபி கவுண் வகைகள்

சேட், T.சேட், கோட் சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர், ரவுசர் வகைகள், இனர் வகைகள், ஜம்பர் வகைகள்

ரூபா 3000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களில் ஆணுக்கு அழகிய T.சேட் இன்றும் பெண்ணுக்கு அழகிய பிளவுஸ் இன்றும் அன்பளிப்பு

06.04.2003 முதல் 14.04.2003 வரை.




## மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்

10, 11, பெரியகடை வீதி
(மலாயன்கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.

(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)
(C/27156)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 - 09 - 1929



உதிர்வு 22 - 02 - 2003

**திருமதி கனகசிங்கம் இராசம்மா**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உத்தமியே!
எந்நாளும் உம் நினைவு எங்களை விட்டு அகலாது
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரது இல்லத்தில் இன்று(07-04-2003) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாதரவத்தை, புத்தூர். (16292)
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உதயன்

# மற்றொரு போருக்குத் தயாராவோம்!

தென்கிழக்காசியாவைக் கலக்கிவரும் பெரும் தொற்றுநோய் ‘சார்ஸ்’.

பல நாடுகளின் உயிர்ப்பலிப் பீதியை ஏற்படுத்தி சர்வதேச ரீதியில் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கும் இந்த நோயினால் மனித உயிரிழப்புப் பாதிப்பு மட்டுமல்லாமல், மேலும் பல பிரச்சினைகளும் உருவாகியுள்ளன.

இந்தநோய் தொற்றும் என்ற அச்சத்தால் பல தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான பயணத்தை வெளிநாடடவர்கள் பலர் - பெருமளவில் - ரத்துச் செய்து வருகின்றனர். விமான சேவைகள் பல செயலிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. பல முக்கிய நாடுகளின் உல்லாசப் பயணத்துறை உட்பட வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தநாடுகளின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உலுக்கி ஆட்டம்காண வைக்கும் ஆபத்து நிலையும் உணரப்பட்டுள்ளது.

விடாது இருமல், அதிக உடற்சூட்டை வெளிப்படுத்தும் கடுமையான காய்ச்சல், குளிர்,நடுக்கம் போன்றவற்றை குணங்குறியாகக் காட்டும் இந்த நோய், இறுதியில் மரணத்தில் கொண்டுபோய் முடிக்கின்றது. இந்த நோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தநோய் எப்படிப் பரவுகின்றது என்ற அடிப்படை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. நோய் பரவாமல் தடுப்பதற்கான மருந்துகள், வழிவகைகள் அறியப்படவில்லை.

மொத்தத்தில் மருத்துவர்களின் கட்டுப்பாட்டுக்குள் சிக்காத நிலையில் உலகில் பல நாடுகளிலும் சஞ்சரித்து, மனித குலத்தை சஞ்சலத்துக்குள் ஆழ்த்தி தமது கைவரிசையைக் காட்டிவருகின்றது சார்ஸ்.

எமக்கு அண்டைய நாடுகளைக் கதிகலங்கடித்து வேகமாகப்பரவிவரும் சார்ஸ், நமது நாட்டின் பக்கமும் தலைவைக்கலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வந்தது. அதுபற்றிய எச்சரிக்கை அறிவிப்புகள் கடந்த ஒருவாரத்துக்கு முன்னரே இலங்கையின் சர்வதேச விமானநிலையமான பண்டாரநாயக்கா விமான நிலையத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

பலரும் அச்சப்பட்டபடி இந்தநோயின் அறிகுறியோடு இரண்டு வெளிநாட்டவர்கள் நேற்றுமுன்தினம் நாட்டுக்குள் வந்துசேர்ந்தபோது கண்டுபிடிக்கப்பட்டனர்.

அப்போதுதான் இத்தகைய பேரச்சத்தை ஏற்படுத்தும், தொற்றுநோய் அபாயத்தை எதிர்கொள்வதற்கு நமது நாட்டின் சுகாதார அமைப்புகள் எவ்வளவு ஆயத்தத்துடன் இருந்தன என்ற ‘சீத்துவம்’ வெளிப்பட்டது.

மேற்காசிய விமான சேவை நிறுவனம் ஒன்றின் விமானப் பணிப்பெண் ஒருவர் விமான மூலமும், ஜப்பான் நாட்டவர் ஒருவர் கப்பல் மூலமும் நேற்றுமுன்தினம் வந்துசேர்ந்தபோது அவர்களில் காணப்பட்ட அறிகுறிகள் அவர்களுக்கு சார்ஸ்நோய்த் தொற்று எற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தின.

இருவரும் உடனடியாக அங்கொடையில் உள்ள தொற்றுநோய் வைத்திசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

இந்தநோயை எதிர்கொள்ளத் தேவையான அடிப்படை வசதிகளைக்கூட அங்கொடை வைத்தியசாலை கொண்டிருக்காததால் அங்கு பதற்றம் உருவானது.

இந்நோய் மிகவேகமாகத் தொற்றும் வகையைச் சார்ந்தது என்று கருதப்படுகின்றது.

. இதனால், இந்நோய் பீடிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரும் வைத்தியசாலைக்கு வந்துள்ளனர் என்ற செய்தி பரவியதும், முகமூடி மற்றும் பாதுகாப்பு கவசங்களை அவசர அவசரமாகத் தேடி அலைந்து அணிந்துகொள்வதில் வைத்தியசாலை டாக்டர்களும் மருத்துவ ஊழியர்களும் முயன்றுள்ளனர். ஆனால், அதற்கான முன்னேற்பாட்டு வசதிகள் ஏதும் அங்கு நேரத்துடன் செய்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

வேறு தொற்றுநோய்களுக்காக அந்த வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த 25 நோயாளிகளில் ஒருவரைத் தவிர ஏனையோரும் கூட மேற்படி இரு நோயாளிகளின் வருகை பற்றிய தகவல் வெளியானதும் அச்சத்தில் விழுந்தடித்துக்கொண்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறிவிட்டனர்.

சம்பந்தப்பட்ட சார்ஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட - இரு நோயாளரும்கூட வைத்தியசாலையில் இருமணிநேரம் தங்கியிருந்து விட்டு தம்பாட்டில் வெளியேறிவிட்டனர். அவர்கள் காணாமற்போய்விட்டனர் என்று கூறப்பட்டாலும், தாம் இலங்கைக்கு வந்துசேர்ந்த விமானம் மற்றும் கப்பலிலேயே அவர்கள் அன்றைய தினம் மாலையில் நாட்டிலிருந்து புறப்பட்டுவிட்டனர் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தொற்றுக்கு உள்ளானவர்கள் என்ற சந்தேகத்தோடு இருவர் அடையாளம் காணப்பட்டதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஏற்பட்ட குழப்பங்கள், குளறுபடிகள் இந்த நோய்த்தொற்று இலங்கையிலும் ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளக்கூடிய ஆயத்தங்களை நமது சுகாதாரப் பிரிவுகள் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபித்துள்ளன.

நமது முழு வளத்தையுமே போர் போன்ற அவசர கால நிலையில் வைத்து எதிர்கொள்ளவேண்டிய பெரிய எதிரி சார்ஸ் என்பதை அதிகாரிகள் உணரவேண்டும்.

# மீனவர் பிரச்சினை குறித்த விவரம் ‘சிரான்’ செயலகத்தில் கையளிப்பு

## சமாசக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.குடாநாட்டில் உள்ள மீனவர்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகள் அடையாளம் காணப்பட்டு அவை பற்றிய விவரங்கள் ‘சிரான்’ செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

குடாநாட்டில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப் பணிமனையில் இடம்பெற்றபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சமாசத்தின் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் யாழ்.மவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ்.நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், கடற்புலிகளின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோரும் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

எந்தவித நெருக்கடிகளும் அற்ற நிலையில் மீனவர்கள் தமது தொழிலில் ஈடுபடுவதற்கான நிலையை ஏற்படுத்தவும்-

மீளக் குடியமர்ந்து வரும் மீனவர்களின் பிரச்சினைகளை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்-

எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

(ஓ-10)

# நாட்டு நடப்பு

## மம்மிக்கு எழுதிய மடல்

மம்மி டடி உங்களை
மறக்க என்னால் முடியல்லை
மூத்த பேத்தி ‘மெடினாவுக்கு’
முற்றாய் போச்சு திருமணம்
செத்த லண்டன் மேயரின்
சின்ன மகன் மாப்பிள்ளை
வெள்ளைக்காரப் பெடியன்தான்
வேல்ஸில் வேலை பாக்கிறான்
ஆனைக் கோட்டைக் காணியை
அறுதியாக வில்லுங்கோ
அந்தக் காசைக் கொண்டு நீங்கள்
அடுத்த மாசம் வாருங்கோ
டடிக்கு சூட்டு ஒன்று
டாலிங் மாப்பிள்ளை தருகிறார்
மம்மிக்கு மக்ஸி ஒன்று
மாட்டி கூட்டி வாருங்கோ

*மம்மிக்கு லவிங் கிஸ்சஸ்*
மகள்
சரசு மார்க்கண்டேயர் (முன் யாழ்ப்பாணத்தில்)
சசி மக்கண்டயர் (இப்போ லண்டனில்)

*பிற்குறிப்பு :*
இடத்திற்கேற்ப தமிழ்ப்பெயர் மாற்றிக்கொண்டோம்.

- விகடகவி.

# ஏ-9 வீதியில் விபத்து அதிகரிப்பு; தவிர்க்க ஒத்துழைப்பு வழங்குக!

## காவல்துறை கோரிக்கையும் ஆலோசனையும்

கிளிநொச்சி,ஏப்.7

யாழ்.- கண்டி வீதியில் (ஏ-9) தொடர்ந்து இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களைத் தவிர்க்க பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவு சகல தரப்பினரிடத்தும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி ‘வீதி விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வோம்’ என்ற தலைப்பில் செய்திக் குறிப்பொன்றையும் அந்தப் பிரிவு வெளியிட்டுள்ளது.அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய சூழலில் ஏ-9 பாதையில் சிறிய ரக வாகனங்கள் தொடக்கம் கனரக வாகனங்கள் வரை தினமும் பயணம் செய்கின்றன. இவ்வாகனங்களின் எண்ணிக்கை, வேகம் என்பனவற்றிற்கேற்ப ஏ-9 பாதை இன்னமும் செப்பனிடப்படவில்லை. அத்துடன், வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களும், ஏனைய பிரதேசங்களில் இருந்து வரும் மக்களுமாக பெரும் எண்ணிக்கையானோர் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பயணம் செய்கின்றனர்.

அத்துடன் ஏ-9 பாதையில் பல பாடசாலைகளும் இயங்குகின்றன. பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் இப்பாதையை தினமும் பாவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் அண்மைக் காலத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதில் எமது மக்கள் பலரின் உயிரும் பலி கொள்ளப்பட்டுள்ளது. பலர் காயமடைந்தும் உள்ளனர். சொத்து இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதில் குறிப்பாக பாடசர்லை மாணவர்களும் வயோதிபர்களும் அடங்குகின்றனர்.

இவ்வீதி விபத்துக்களை முற்றாகத் தடுத்து நிறுத்தி எமது மக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எமக்குள்ளது. எனவே, பின்வரும் வழிகளில் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி வீதி விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

★ துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் போது பக்கம்பக்கமாக செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்களில் செல்லும் போது பின்னால் திரும்பி பார்த்துக்கொண்டு முன்னால் வாகனங்களைச் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

★ சிறு வீதிகள், ஒழுங்கைகளிலிருந்து பிரதான வீதிக்கு வரும்போது உங்கள் வாகனங்களின் வேகத்தைக் குறைத்து பிரதான வீதியின் இரு பக்கங்களையும் அவதானித்த பின்னர் பிரதான பாதையின் வலது பக்கம் வரும் வாகனங்கள் சென்ற பின் பிரதான பாதைக்குள் பிரவேசியுங்கள்.

★ உங்களின் முன்னாள் செல்லும் வாகனங்களை முந்திச் செல்ல வேண்டுமாயின் அவசரப்படாமல் போதிய இடவசதி ஏற்படும்போது மட்டும் முந்திச் செல்லவும்.

★ வேகத் தடுப்பு இல்லாத வாகனங்களை எடுத்துச் செல்வதை முற்றாகத் தவிர்க்கவும்.

★ மதுபோதையில் வாகனம் செலுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும்.

★ பாதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேக அளவிற்கு அதிகமாக வாகனங்களைச் செலுத்தவேண்டாம்.

★ பாடசாலைப் பிள்ளைகள் வீதிகளைக் கடக்கும் போது உங்கள் வாகனங்களை நிறுத்தி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செல்லவும்.

★ இரவு நேரங்களில் உங்கள் வாகனங்களின் பிரதான வெளிச்சம் பாய்ச்சிகள் (கெட் லைட்) இரண்டின் செயற்பாட்டில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டும் இல்லாது பயணம் செய்தல் வேண்டாம்.

★ எதிரே வரும் வாகனத்திற்கு மங்கல் வெளிச்சத்தை (டிம்) மாற்றி செல்லவும்.

மேற்கூறிய விடயங்களை சரியான முறையில் கடைப்பிடித்து எமது மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்போம். - என்றுள்ளது. (எ-3)

# யாழ்.குடாநாட்டில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு பசுமாடுகள்

## அமைச்சர் மகேஸ்வரன் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.குடாநாட்டில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு பசுமாடுகள் வழங்கப்படவுள்ளன.

விவசாய கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இதற்கென ஆயிரம் பசுமாடுகளை வழங்கியுள்ளார் என இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

பசுமாடுகளை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் -

அடுத்த வாரமளவில் மேற்படி பசுமாடுகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுவிடும் என்றும் - அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்தியாவில் இருந்து நல்லின பசுமாடுகளை யாழ்.குடாநாட்டுக்கு இலவசமாகக் கொண்டு வந்து தருவதற்கு கப்பல் நிறுவனம் ஒன்று இணங்கியுள்ளது என்றும் -

இதன்மூலம் மேலும் பல பசுமாடுகளை வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-8)

### நாளை

பங்குனி 25
செவ்வாய்க்கிழமை
(08.04.2003)
திதி: ஷஷ்டி
முற்பகல் 11.48 வரை
நட்சத்திரம : மிருகசீரிடம்
முற்பகல் 12.46வரை
சுபநேரம் : 10.37 - 12.07
ராகுகாலம் : 3.07 - 4.37
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

போதிய அறிவு பெற்றிருப்பதாய்க் கருதுபவன் ஓர் அறிவும் பெற்றிருக்கவில்லை.

# தானாக ஓடிய டிராக்டரில் சிக்கிய சாரதி படுகாயம்!

நிலத்தில் நின்றவாறு டிராக்டரை இயங்கவைத்த சாரதி, தற்செயலாக டிராக்டரின் ‘கியர்’ விழுந்து அது வேகமாக ஓடிய போது அதனுள் அகப்பட்டு படுகாயமடைந்தார்.

பூநகரி, தம்பிராய் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் விசுவநாதன் பாலசுப்பிரமணியம்(வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டிராக்டர் ஓடத்தொடங்கியதும் கீழே விழுந்தபோது சமயோசிதமாக டிராக்டரின் மிதிபலகையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இழுபட்டுச் சென்றதால் இவர் உயிர் ஆபத்தின்றித் தபபித்துக்கொண்டார். ஓடிய டிராக்டர் மரத்துடன் மோதி நின்ற பின்பே இவர் வெளியே இழுத்தெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

# வவுனியா வளாக முதல்வராக திருமதி மகேஸ்வரன் இன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வராக சிரேஷ்ட பேராசிரியர் திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் இன்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமயம் இவரது நியமனம் குறித்து அறிவிக்கப்பட்டது.

துணைவேந்தர் இந்த நியமனம் தொடர்பாக சமர்ப்பித்த சிபார்சை பேரவை ஏற்றுக்கொண்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் இரசாயனவியல் துறைப் பேராசிரியர் (அமரர்) எஸ்.மகேஸ்வரனின் துணைவியாரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் சிறப்புப்பட்டம் பெற்று அங்கு விரிவுரையாளரானார்.

பின்னர் செபீல் பல்லைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியனவற்றில் தமது துறைசார்ந்த புலமைகளை முடித்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர்.

தற்சமயம் யாழ்.பல்கலைக்கழகத்தின் இரசாயனவியற் துறையில், சேதன இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளராக இவர் கடமையாற்றி வருகிறார். (எ-3)


BOXER
கண்கவர் தோற்றம், சிக்கனம்
மற்றும் உயர்தொழில்நுட்பத்தில்
என்றும் முன்னணியில்
இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER.
நம்பிக்கை மற்றும் தரத்திற்குப் பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவுக்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர்காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.
இப்போது BOXER CT DX மேம்பட்டான சக்திக்கும் எரிபொருள் சிக்கனத்திற்கும் K-tec தொழில்நுட்பவியல் சகிதம்.
Boxer CT - ரூபா. 68,568/-
Boxer AT - ரூபா. 64,200/-
Boxer CT DX - ரூபா. 71,526/-
புத்தாண்டு விசேட சலுகை
பஜாஜ்
இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.
தன்னிகரற்ற உத்தரவாதம்
சக்திவாய்ந்த 4 ஸ்ட்ரோக் 100cc என்ஜின் - K-tec தொழில்நுட்பவியலை பக்கபலமாக கொண்டு 7.02-7.7 BHP வரை அபாரமான செயற்திறன் கொண்டது.
கரடு முரடான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிரேடில் அடிச்சட்டகம்.
பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன்விளக்கு.
இப்போது சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ ஓடக்கூடிய எரிபொருள் சிக்கனம் கொண்டது.
Boxer இப்போது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.
DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050
அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் : குறிஞ்சி ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0777-626919
குறிஞ்சி ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 0777-626919
Mel Ads

### அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால்

# நாடாளுமன்ற பலத்தை உறுதிப்படுத்த எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவிப்பு

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

கொழும்பு,ஏப்.7

அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் நாடாளுமன்றத்தின் பலத்தை ஸ்திரப்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. கடந்த முதலாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் விரிவான பேச்சு நடத்தினார். அப்போதே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் ஸ்திரமாக இருக்க வேண்டும். இதற்கேற்ப நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளும்' மாற்றியமைக்கப்பட வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்த போது முதலாவது நாடாளுமன்ற காலத்தில் இயற்றப்பட்ட மிகவும் பழைமையான - நிலையியற் கட்டளைகள் தற்போதைய நடைமுறைக்கேறப மாற்றப்படவேண்டியதன் அவசியத்தையும் பிரதமர், கட்சித் தலைவா களிடம் விளக்கிக் கூறினார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை ஸ்திரப்படுத்தும் வகையில் நிலையியற் கட்டளைகளை திருத்தி அமைப்பது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கென 11 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அரச தரப்பில் ஆறுபேரும், எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐந்து பேரும் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை -

நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக ,கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒவ்வொரு விடயங்களையும் பரிசீலனை செய்து சிபார்சு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கென பல நாடாளுமனற் உப குழுக்களும் அமைக்கப்படும். இக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களே தலைவர்களாக நியமிக்கப்படுவர். பிரதமரின் இந்த ஆலோசனைகளுககு கட்சித் தலைவர்கள் ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இக்கூட்டத்தின் பின் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் சில சிரேஷ்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் அரசு மேற கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் விளக்கம் அளித்தா. அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவு தெரிவித்துள்ளார் எனவும் - அமைச்சர் பீரிஸ் கூறினார்.

(எ)

# யுத்த நிலைமைகளால் அழிவுகளைச் சந்தித்த சாவகச்சேரியைப் புனரமைக்க நடவடிக்கை

## ஆரம்பகட்ட வேலைகள் குறித்து ஆராய்வு

சாவகச்சேரி,ஏப்.7

2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக பலத்த அழிவுகளைச் சந்தித்த சாவகச்சேரி நகரை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் குறித்து ஆராயப் பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலக மண்டபத்தில்கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் பிரிவின் பிராந்தியப் பணிப்பாளர் நாயகம் கே.வி.தர்மசிறீ கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ மற்றும் நகர அபிவிருத்திச் சபையின் வடமாகாண பிராந்திய பணிப்பாளர் நாயகம் நா.இராசநாயகம் மற்றும் இலங்கை மின்சாரசபை, வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஆகியவற்றின் முகாமையாளர்கள். வீதி அபிவிருத்திச்சபை, தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபை உள்ளிட்ட பல திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் உரையாற்றுகையில்:-

கடந்த கால யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகரை மீளப்புனரமைக்க ஏதுவாக நகர அபிவிருத்தித் திட்டங்களை வகுக்க நகர அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருளாதார, சமூக நிலைகளுக்கு ஏற்ப இவ்அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடவேண்டியுள்ளது. வகுக்கப்படும் திட்டங்களை மக்கள் ஆதரவுடனேயே நிறைவேற்றமுடியும். மேற்படி திட்ட வரைவுகள் தொடர்பாக ஆலோசனைகளை மட்டுமே நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்க முடியும்.

முற்றாக அழிந்துள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையைப் புனரமைக்கவும், வீதிகளை நவீன மயப்படுத்தவும், தொழிற்சாலைகள் மற்றும் வீட்டுத்திட்டங்களை நவீன கொளகைக்கிணங்க நடைமுறைப்படுத்தவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தேவை.

அத்துடன், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களைக் கருத்தில்கொணடு நகர அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கவேண்டும்.

நகரப்பகுதியில் தகவல் தொழில் நுட்ப மையங்களை நிறுவுதல் தற்போதைய காலப்பகுதியில் முக்கியமானது - எனவும் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நகரசபைச் செயலாள் மு.செ.சரவணபவ உரை நிகழ்த்துகையில்:-

சாவகச்சேரி நகரமே முற்றாக அழிந்துள்ளது. இந்த இக்கட்டான நிலையில் மக்களுக்கு அத்தியாவசியமான திட்டங்களை நாம் நிறைவேற்றிக்கொடுத்தே ஆகவேண்டும்.

பொதுச் சந்தை, நகர குடிநீர்த் திட்டம், பொது நூலக வசதிகள், விளையாட்டு மைதானம், சிறுவர் புங்கா என்பன தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார்.

(எ-31)

# இந்து மாநாட்டை முன்னிட்டு ஆலய விவரம் அடங்கிய நூல்

## வெளியிடப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள் தொடர்பான தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றின் வரலாற்றுக் குறிப்புகளையும் அவை சம்பந்தமான படங்களையும் உள்ளடக்கிய தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது என இந்து கலாசார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்து கலாசார அமைச்சு விடுத்து செய்திக் குறிப்பு வருமாறு:-

ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறங்காவலர்கள், அறநெறிப் பாடசாலைகள், பாடசாலைகளில் அமைந்துள்ள ஆலயங்கள் மற்றும் இவை சார்ந்த சமய சமூக கலாசார பணிகள், ஏனைய செயற்பாடுகள் என்பவற்றைத் தெளிவாக விளக்குவதாகவும்-

அவற்றின் நிர்வாக சபை உறுப்பினர்களின் பெயர், அத்துடன் ஆலய சிவாச்சாரியார்கள், மதகுருமார் ஆகியோரின் பெயர்கள், படங்கள் மற்றும கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த ஆலயங்களின் படங்கள் என்பவற்றையும், கோவில்களின் பெரிய அளவிலான புகைப்படங்களையும் கொண்டதாக இந்நூல் அமையும்.

இவை தொடர்பான விவரங்களை பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, கொழும்பு - 04 என்ற முகவரிககு எதிர்வரும் 15 ஆம திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்க வேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-ரி)

# அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஆசிய தொழில் அமைச்சர்கள் தீர்மானம்

கொழும்பு,ஏப்.7

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பை ஆசிய பிராந்திய தொழில் அமைச்சர்கள் ஒரே குரலில் கண்டித்துள்ளனர். யுத்தத்தினால் சீரழிந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஆசிய பிராந்திய நாடுகள் மனிதவள உதவிகளை வழங்குவது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த புதனும், வியாழனும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஆசிய பிராந்திய நாடுகளின் தொழில் அமைச்சர்கள் மாநாட்டிலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆசிய பிராந்திய நாடுகளில் இருந்து சென்று வெளிநாடுகளில் தொழில் புரியும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையும், நலன்புரி சேமநலன்களையும் பாதுகாக்கும் நோக்குடனேயே இம்மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டின் பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த புதனன்று நடைபெற்ற மாநாட்டின் இறுதி நாளன்று பிலிப்பைன்ஸ் நாட்டின் தொழில் அமைச்சர், அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்டுள்ள தாக்குதலைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை முன்வைத்தபோது யுத்த அனர்த்தத்திலிருந்து நாட்டை. மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆசிய பிராந்திய நாடுகள் தொழிலாளர்களை வழங்கி ஈராக்கிற்கு உதவ வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அமைச்சரின் இநத ஆலோசனையை மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டனர் என்றும் அமைச்சர் கூறினார்.

(எ)

### சீருடைபெற அறிவுறுத்து

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணி சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் உள்ள புடைவை விற்பனைப் பகுதியில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்றும் -

அச்சீருடைத்துணிகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் சீருடை முத்திரைகளைச் சமர்ப்பித்து பெற்றுக கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-14)

# வாசகர் திருமுகம்

## மருந்துகளை கையாள்வோருக்கு ஆங்கில அறிவு அவசியம்

அண்மையில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்தது. மருத்துவரின் சிபார்சு **'Prescription'** இல்லாமல் மருந்து விற்பனை நிலையங்களில் மருந்து விற்பனை செய்யக்கூடாது - ஆங்கில மருந்து வர்ததகர் சங்கம் தீர்மானம்' என்று. இது மிகவும் வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம். ஆனால் மருந்து விற்பனை நிலையங்களில் பணிபுரிபவர்களில் எத்தனை பேருக்கு மருந்துகளைப் பற்றி ஒழுங்காகத் தெரியும் என்பதே என்முன் எழுகின்ற கேள்வி.

அண்மையில் எமது மகள் நிறைகுறைவாகக் காணப்படுகிறார் என வைத்திய அதிகாரி ஒருவரிடம் காட்டியபோது அவர் **'Cow and Gate Stepup'** வாங்கிக் கொடுக்கச் சொல்லி மாதிரி **(Sample)**பைக்கட் ஒன்றையும் தந்தார். நான் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இரு ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களுக்குச் சென்று **'Cow and Gate Stepup'** இருக்கிறதா என மருந்துச்சாலை உரிமையாளர்களிடம் கேட்டேன். (ஊழியர்களிடம் அல்ல) இருவரும் அப்படியொரு சாமான் யாழ்ப்பாணத்திற்கு இன்னமும் வரவில்லை என்று சொல்லிவிட்டனர். வீட்டுக்கு வந்து டாகடர் தந்த மாதிரிப் பைக்கெட்டை எடுத்துப் பார்த்தேன். அதில் **Cow and Gate Stepup3** என எழுதப்பட்டிருந்தது. பின்னர் மருந்துச்சாலைக்குச் சென்று **Cow and Gate 3** இருக்கிறதா என்று கேட்டேன். உடனே 'ஓமோம இருக்கிறது' என்று சொல்லி எடுத்துத் தந்தார்கள். நான் விசாரித்த இரு மருந்துச்சாலை உரிமையாளர்களும் பத்து வருடங்களுக்கு மேலாக யாழ்.நகரில் ஆங்கில மருந்து விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் நிலைமையே இப்படியென்றால் மருந்துச்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் நிலை என்ன?.

திருநெல்வேலி. **- சந்திரமோகன்.**

## பாஷையூர் மீனவர் கரைதிரும்ப படையினர் புதிய கட்டுப்பாடு

பாஷையூர் பகுதியில் இரவுத் தொழில் (றால்) புரியும் தொழிலாளர்களை கடந்த இரண்டு நாள்களாக விடிந்த பிறகே கரைதிரும்ப இராணுவம் அனுமதிக்கின்றது.

மாலை 5 மணிக்குச் சென்று (மடித் தொழில்) தொழில் புரியும் தொழிலாளர்கள் இரவு 7.30 - 11.00 மணிக்கிடையில் தொழில் முடிந்து கரைக்குத் திரும்புகின்றார்கள். வழமையாக இவர்களை, கரைதிரும்பி 2 அல்லது 3 மணித்தியாலங்கள் கடலில் தரிக்கவிட்டு ஒரு மணிக்கே உள்ளுக்கு எடுத்தார்கள். ஆனால், இரண்டு நாள்களாக விடிந்த பிறகே கரைதிரும்ப அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இதனால் தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

I. பிடிக்கப்படும் கடலுணவுகள் பழுதடைந்து மிகவும் குறைவான விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன.

II. குறைந்தது 8 மணித்தியாலங்கள் (கரையில் இருந்து 10 அடி) கடலில் கிடக்கவேண்டியுள்ளதால் நோய்களை தேடிக்கொள்கின்றனர். அன்றாடக் காய்ச்சிகளான இவர்கள் அடுத்தநாள், தொழிலை நினைத்துக் கூடப்பார்க்கமுடியாமல் போகின்றது.

எமது பிரச்சினைகள் பலவற்றை தங்களது பத்திரிகையல் பிரசுரித்து விடிவு பெற்றுத் தந்த நீங்கள் இப்பிரச்சினைக்கும் விடிவுபெற்றுத் தருவீர்கள் என நம்புகின்றோம்.

பாஷையூர். **- க.டேமியன்.**

## 'அலோபதி' மருந்து மூலம் சித்த வைத்தியம் செய்வதா?

நான் சித்த வைத்தியம், ஆயுர்வேத சிகிச்சை முறைகளில் மிக ஆர்வம் உடையவள். எங்கள் நாட்டு மருத்துவ குணச்செடிகள் மூலிகைகளால் சித்த, ஆயுரவேத மருத்துவ முறைகள் இலங்கையில் தமிழர் வாழ் பிரதேசங்களில் வளரவேண்டும் என்று கனவு காண்பவள். யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்தவைத்தியத்துறை இடம்பெற்றதை அறிந்து மகிழ்ந்தவள்.

ஆனால், சமீபத்தில் கடந்த, 20.03.2003 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் பேராசிரியர் சுப்ரமணியம் பவானி அவர்கள் எழுதிய 'சுதேச மருத்துவர்கள் சிகிச்சையளிக்க ஆங்கில மருந்துகளைப் பாவித்தல் தவறா?' என்ற கட்டுரையை வாசித்து அதிர்ந்து போனேன்.

சுதேச வைத்தியமுறையில் பக்கவிளைவுகள் இல்லை என்பதை உணர்ந்து, இந்திய மருத்துவ முறைகளை நாடி மேல்நாட்டவர்களே தெற்காசிய நாடுகளை நாடி வருகிறார்கள். எமது அதிமதுரத்தை எடுதது இருமலுக்கு 'வல்மலிக்ஸ்' மருந்து செய்து அதைத் தமக்குரியதாய்ப் பதிவு செய்தார்கள் என்று அறிகிறேன்.'வேம்பு' மற்றும் 'மஞ்சள்' போன்றவற்றின் காப்புரிமைகளும் கூட மேற்கு நாடுகளுக்குப் போய்விட்டதாகவும் படித்த ஞாபகம்.

நாம் என்ன செய்கின்றோம்? சுலபமாகக் கிடைக்கின்றன என்பதால் 'அலோபதி' மருந்துகளைக் கொடுத்து அறியாத மக்களுக்குச் 'சித்தவைத்தியம்' செய்யப்போகிறோமா? சித்த ஆயுர்வேத முறைகள் நன்கறிந்து, மூலிகைகளை வளர்த்து மருந்துகளைச் செய்வதை, வளர்ப்பதை விட்டு விட்டு, சித்த - ஆயுர்வேத மருந்துகள் இங்கு 'ரெடி'யாக வராததால் கிடைக்கின்ற 'அலோபதி' மருந்துகளைப் பாவிப்போம் என்ற வாதத்தை ஏற்கமுடியுமா? ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லை என்று சொல்லுவது போலாகாதா?.

அப்படியானால், யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்தவைத்தியத்துறை எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? உதாரணமாக, யாழ்.பல்கலைக்கழகத தில் நுண்கலைத்துறையும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையும் சுதேச கலைகளுக்காகவும், சமகால கலை முறைகளையும் ஆய்வு செய்து எமக்கேயுரிய பாரம்பரியங்களைப் பேண பல முயற்சிகள் செய்வது பற்றிப் பலரும் அறிந்திருக்கிறோம். சுதேச வைத்திய சித்த மருத்துவபீடம் எதற்கு அமைக்கப்பட்டது?.

'அலோபதி' மருத்துவர்கள் அந்த மருத்துவத்துறையை ஆழ்ந்து கற்று மருந்துகளின் தன்மையறிந்து அதே துறையில் மருத்துவர்களாக இருக்கும் போது, சித்தவைத்தியம் என்று படித்துவிட்டு இவர்களும் 'அலோபதி' மருந்துகளைக் கொடுப்பது நியாயமா? அது 'சித்தவைத்தியம்' என்ற வைத்தியத்தையே கொச்சைப்படுத்துவதாக ஆகாதா?

என்னைப் பொறுத்தவரையில், 'சித்தவைத்தியம்' என்று கற்கப்போனவர்கள் அதில் ஒரு கால் இதில் ஒரு கால் என்று நிற்கக்கூடாது என்றே கூறுவேன். ஏன்? 'சித்தவைத்தியர்கள் 'அலோபதி' மருந்துகளைப் பாவிக்கக் கூடாது என்று சட்டம் வந்தால் கூட நல்லது என்பேன். என் கருத்துக்கள் உங்கள் பத்திரிகையில் வெளிவந்து ஒரு வாதப் பிரதிவாதம் ஏற்பட்டாலும் மகிழ்வேன்.

கொழும்பு. **- கமலினி செல்வராசன்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மறுசீரமைக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள CG125(Japan) 135-XXXX மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:T.P.:0777 - 271478. (16464)

## கணித வகுப்புகள்

G.C.E. O/L 2003 திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளித்து கணிதத்தை ஆரம்ப அறிவில் இருந்து கிழமைக்கு 10 மணித்தியாலங்கள் காலை அல்லது மாலை வகுப்புகள் நடைபெறும். பராமாஸ்ரர், 8, பிளச்சஸ ஒழுங்கை, சுண்டுக்குளி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்). (16460)

## காணவில்லை

சித்தன்கேணியில் வீட்டில் கட்டியிருந்த வெள்ளைநிற ஆறுமாத கன்றின் தாய்ப்பசுவைக் காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் த.சண்முகம் கீரிமலை றோட், சித்தன்கேணி எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (16439)

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி" சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bath - room உடன் கூடிய 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.சிவலிங்கம் (J.P.) ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

## வீடு வாடகைக்குத் தேவை

ஓரளவு வசதிகளுடன் கூடிய நல்ல வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை.(மாநகரசபை எல்லைக்குள்) தொடர்பு 186/25 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. T.P.:3605, 3817, 0777 - 111460. (C/27177)

## தேவை

நிறைகூடிய புறொயிலர்கள் தேவை. தொடர்பு:- சிவா இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (16440)

## இலக்கியக் கட்டுரைகள்

12 சிறுகதைகள், நாவல், குறுநாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார் எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. A/L மாணவர்களும் படிக்கலாம். (16429)

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 10இற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் நூல் G.C.E. O/L பரீட்சைக்குரிய பயிற்சி வினாக்களும விடைகளும் அடங்கியது. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. ஆசிரியர்: தம்பித்துரை பாலகிருஷ்ணன். (16254)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.7

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய முறைசாராக்கல்விப் பிரிவின் கேக் ஐசிங் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய செயற்பாட்டுக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி நிகழ்வில் கல்விவலய செயற்றிட்ட அலுவலர் ச.சிவானந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம், ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் கா.சிவசோதி ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர். (எ)

# வேலை ஆள்கள் தேவை

கணனி, தட்டச்சு இயக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
330,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/27178)

# விற்பனைக்கு

ISUZU JOURNEY (L) சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:-
**M.THUFAIL**
0777 760820
(16421)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்.

## ஏலவிற்பனை அறிவித்தல்

இதன் கீழ் விவரிக்கப்பட்ட பொருள்கள் 2003.04.21ஆம் திகதி கீழ்க் குறிப்பிட்ட உப அலுவலகங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிட்ட நேரத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (அலுவலக நேரத்தில் குறித்த இடங்களில் பொருள்களைப் பார்வையிடலாம்) ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைதினம் ரூ.100/- ஐ வைப்பாகச் செலுத்திப் பங்குபற்றமுடியும். அத்துடன் சித்திபெற்ற ஏலதாரர் அன்றையதினமே பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன், பொருள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தல்வேண்டும்.

**01. சுன்னாகம் உப அலுவலகம் — காலை 11.30 மணி.**

A. பிக்கப்பிலிருந்து கழற்றப்பட்ட பொருள்கள்.

(1) பாவித்த பிக்கப் ரயர் - 05
(2) பாவித்த பிக்கப் பற்றறி - 02
(3) பிக்கப் சீற்றின் மேலுறைகள் - 06 துண்டுகள்
(4) மழைத்துடைப்பான் - 01
(5) Ball Joint I) Up - 02
II) Down - 02
(6) A part - 01, Other part - 01
(7) Tie/ Rot A part - 02, Other part - 02
(8) Shock Absorber F - 02, R - 02
(9) Brake Pad - 01
(10) Base Bar Mount - 02
(11) Tie Bar Bush - 04

B. (1) Down Pipe (4") Plastic - 11/2,' 3', 4', 5', 7', 10', 11', - எண் 11, 05, 14, 02, 04, 02, 01
(2) Down Pipe G.14" - 51/2' - 0.1
(3) P.V.C. Pipe 11/2" - 7' - 01
1" - 3' - 01

**02. உடுவில் உப அலுவலகம் — காலை 10.30 மணி**

A. பனைமர வளை

1. 6"X2" - 15', 13', 10', 7', 6' - எண் - 60, 02, 01, 02, 02
2. 5"X2" - 8', 7' - எண் - 01, 01.
3. 9'7", 6'6", 9'11", 15'9", 5' - எண் - 10, 07, 01, 04, 02, 45
4. 2"X2" - 4' - எண் 20.
5. 4"X2" - 6' - எண் 09

B. தீராந்தி

1. 6"X6" - 10', 9' - எண் 02, 02
2. 4"X3" - 6', 5', 4' - எண் 01, 02, 03
3. 4"X2" - 10', 6', 5' - எண் 08, 02, 06
4. 3"X21/2" - 5' - எண் 01
5. 3"X2" - 41/2', 11/2' - எண் 02, 01
6. 11/2"X11/2" - 5' - எண் 01

C. சலாகை

1. 118' (12'6" - 4, 11' - 01, 7' - 01, 14' - 01, 12' - 03)
2. 2"X1" - 55' (பாவனைக்கு உதவாதவை)

D றீப்பைகள் - 82 அடி

E. கப்புகள் - 8'5" - எஸ் 5

F. (1) ஓடுகள் - 575
(2) முகட்டோடுகள் - 17
(3) முகட்டு சிற்றுகள் - 44

G. கல்நார் நெளிக் கூரைத் தகடுகள் (சேதமடைந்தவை) பல்வேறுபட்ட அளவுகளில் எண்ணிக்கை - 87

H. கல்நார் தட்டைக்கூரைத்தகடுகள் - 46 துண்டுகள்

I. பீலி (பிளாஸ்ரிக்) பல்வேறுபட்ட அளவுகளில் எண்ணிக்கை - 09

J. வெற்றுத் தார்ப் பரல்களை (1) 172 ] - 09
(2) 140 ] - 215

K. 4"X3" அரிந்த மரத்திலான கதவுநிலை (5'X8') எண் - 02

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 2003.04.04 - செயலாளர்.
(C/27181)

# ஜோதிடம்

## இந்திய பிரபல பால ஜோதிடர்

**ராஜாமணி** யாழ்.நகருக்கு முதல் முறையாக வருகை. தங்களின் ஜாதகத்தை கொண்டு நிகழ்கால, எதிர்கால பலன்களை தெளிவாக தெரிந்து கொள்ள விரும்புவோர் நேரில சந்திக்கவும். (5தினங்கள் மட்டும்)

NALLUR TOURIST CENTRE
(KANTAAN KARUNAI)
NO.431,TEMPLE ROAD,NALLUR.
T.P.0777-187326
(16441)

# 3 தசாப்தங்களாக கல்விச் சேவை ஆற்றும் நிறுவனத்தில்

## O/L Dec. 03
## DAY CLASS

பகல் நேர வகுப்பு
(காலை 8.30 – பி.ப.1.15 வரை)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஏப்ரல் 15 இற்கு பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டா
The Express Institute
Irupalai, Kopay.
(16307) அதிபர்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 21 - 10 - 1924



உதிர்வு 23 - 02 - 2003

## திருமதி வல்லிபுரம் சின்னப்பிள்ளை
### (செல்வம்) (08.04.2003)

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலிகள் தெரிவித்தோருக்கும் எமக்கு பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக அன்னார் நோயுற்ற காலத்தில் மருத்துவ சேவை வழங்கிய ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினருக்கும் நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

நாளை (08.04.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கொடுக்குளாய் வீதி,
உடுத்துறை. தாளையடி. (16360) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அரசரத்தினம் வாசுதேவன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அரசரத்தினம் வாசுதேவன் 4.4.2003 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் புன்னாலைக்கட்டுவன் அரசரத்தினம், காலஞ்சென்ற அகிலேஸ்வரி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் கௌதமி (பிரான்ஸ்) யின் அன்புக் கணவரும் கொடிகாமம் கமலநாதன் - குணபூஷனி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மீனலோஜினி மற்றும் கீதாஞ்சலி (லண்டன்), முரளீதரன் (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), யசோதா (ஆசிரியை, ஈவினை அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகநாதன் (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் 9.4.2003 புதன்கிழமை நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.*
*பிரான்ஸ்*
*T.P.NO 0033 - 42501128*
(16459)
தகவல்:
முரளீதரன்
(சகோதரன்)

## திருமதி நாகமணி பகவதி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் அனலைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமணி பகவதி 03.04.2003 வியாழக்கிழமை மூளாயில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சிதம்பரத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மருதனார் மற்றும் சின்னம்மா, பார்வதி, சடாசிவம், பரமசாமி, சரஸ்வதி, லெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராமசாமி, மகாலிங்கம், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் சிவநாதன் (சுவிஸ்), தவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்மணி (மலர் - கனடா), சரோஜினிதேவி, சிவனேஸ்வரி, அருந்தவமணி (சுவிஸ்) நமசிவாயம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2003) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*காளிகோவிலடி,*
*மூளாய்.*
(16458)
தகவல்:
மகாலிங்கம்
(சின்னையா - மகன்)

# 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி (நயினாதீவு) | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி (நயினாதீவு)



**அமரர் கா.சு.பாலசுந்தரம்**
மலர்வு :31-07-1917
உதிர்வு:28-03-1971
திதி :08-04-2003



**பாலசுந்தரம் பார்வதிப்பிள்ளை**
மலர்வு :21-11-1931
உதிர்வு:20-03-2002
திதி :07-04-2003

எமது ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்து எமக்கு நல்வழிகாட்டிய எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். நீங்கள் என்றும் எம் நினைவில்....

*ஸ்வர்ணம், 26/15, வளாக ஒழுங்கை,*
*திருநெல்வேலி*
(16212)
பா.காசிநாதன் (மகன்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

# நிவாரண அரிசியை கொள்வனவு செய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.7

குடாநாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண விநியோகத்துக்கு தேவையான அரிசியை உள்ளூரில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவுசெய்ய நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த ப.நோ.கூ.சங்கத் தலைவர்களுக்கான கூட்டத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக இந்த அனுமதி வழங்கப்பட்டது.

மூன்றுமாத காலத்துக்கு தேவையான அரிசியை கொள்வனவு செய்ய வசதியாக முற்பணம் வழங்கப்படும் என்றும் -

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு அல்லது திறைசேரியில் இருந்து இந்த நிதியைப் பெற்றுத்தருவதாகவும் அரச அதிபர் அங்கு தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கங்கள் அரிசி கொள்வனவு செய்வதற்கு எதிராகப் பலர் முயற்சி எடுத்தபோதும், இந்த அனுமதியை வழங்கிய பிரதமருக்கும் அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த யாழ்.அரச அதிபருக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் எஸ்.விஜிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒரு மாதத்துக்கு 2 ஆயிரம் மெற்றிகதொன் அரிசி தேவைப்படுகின்றது. இந்த அரிசியை 24 ப.நோ.கூ.சங்கங்களும் பங்கிட்டுக் கொள்வனவு செய்ய முடியும்.

கொள்வனவு செய்யப்படும் அரிசிக்கான விலையை குழு ஒன்று நிர்ணயிக்கும். அக்குழுவில் ப.நோ. கூ.சங்கப் பிரதிநிதிகள், நுகர்வோர் பிரதிநிதிகள், மேலதிக அரச அதிபர் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

நிவாரண விநியோகத்தில் 50 சதவீதம் அரிசியும், 25 சதவீதம் மாவும், 20 சதவீதம் சீனியும், 5 சதவீதம் பருப்பும் வழங்கப்படவேண்டும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3-10-173)

காரைநகரில் இன்று

## உதவி அரசஅதிபர் பணிமனை வைபவரீதியாகத் திறப்பு

காரைநகருக்கென தனியாக உருவாக்கப்பட்டுள்ள உதவி அரச அதிபர் பணிமனையின் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கீழ் இயங்கி வந்த காரைநகர் பிரதேசத்துக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒன்று நிறுவப்படவேண்டும் என்று அவ்வூர் பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இக்கோரிக்கை தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பிரதமர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதை அடுத்து தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனை உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெறும் இத்திறப்பு விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் புதிய பணிமனையைத் திறந்துவைப்பார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் எஸ்.ரங்கராஜன், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான முதலாவது உதவி அரச அதிபராக எஸ்.சாம்பசிவம் பதவியேற்கவிருக்கின்றார்.

காரைநகருக்கு பிரதேச சபையும் தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அலுவலகத் திறப்பு விழா அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

(எ-3-73)

ஈராக் போர் குறித்து

## அமெரிக்கத் தூதர் வில்ஸ் ஜனாதிபதிக்கு விளக்கம்

கொழும்பு,ஏப்.7

ஈராக் போரில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அமெரிக்கத் தூதர் அஸ்லி. வில்ஸ் விளக்கமளித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போரை விமர்சித்த ஜனாதிபதி, அமெரிக்காவின் இரட்டைவேடம் அம்பலமாகியுள்ளதாக கடந்தவாரம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்தே அமெரிக்காவின் தூதர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.

ஈராக் மீதான போர் நடவடிக்கை நியாயமானதெனத் தெரிவித்த அமெரிக்கத் தூதர் தமது பக்க நியாயங்களை ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் தூதர் எடுத்து விளக்கியுள்ளார்.

(ஒ-3-12)

கசிப்பு உற்பத்தி வழக்கில்

## மானிப்பாய் வாசி ஒருவருக்கு ஒருலட்சத்து 18ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு,ஏப்.7

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் உற்பத்தி செய்தமை, உற்பத்திக்கான உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக பெண் ஒருவருக்கு மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் ஒரு லட்சத்து 18 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாக விதித்தார்.

மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மானிப்பாய், 3ஆம் கட்டையைச் சேர்ந்த பாலராஜ் இந்திராணி என்பவருக்கே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பெண் 13 போத்தல் கசிப்பு மற்றும் கோடா, கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து இத்தொகை தண்டனையாக விதிக்கப்பட்டது.

இதேவேளை - சாங்கானை மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் பரமேஸ்வரிக்கு ரூபா 28 ஆயிரம் தண்டமாக விதிக்கப்பட்டது.

(எ-86)

## அக்கரைப்பற்று பாடசாலைகளுக்கு வழங்கிய கணனிகள் செயலிழப்பு!

அக்கரைப்பற்று,ஏப்.7

வடக்கு, கிழக்கு மாகாணசபையினால் அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகள் செயலிழந்து போயிருக்கின்றன. இதனால், கணனிக் கூடங்கள் வெறிச்சோடுவதாகத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கிலுள்ள பாடசாலைகள் பலவற்றில் இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

அக்கரைப்பற்றிலுள்ள பிரபல மகா வித்தியாலயம் ஒன்றுக்கு ஒருவருட காலத்துக்குள் வழங்கப்பட்ட கணனிகள் செயலிழந்தன. செயலிழந்த கணனிகள் திருத்த வேலைகளுக்காக தலைநகரிலுள்ள கணனி திருத்தும் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பி.3 ரக கணனிகளின் ஐ.சிகள் அடிக்கடி பழுதடைவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மிகவும் குறைந்த தரத்திலான தொழில்நுட்பங்களைக் கொண்ட கணனிகளே பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகப் பாடசாலைகளின் தகவல் தொடர்புப் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

உயர்ரக கணனிக்கான ஐ.சிகள் பழுதடைந்தால் புதியவற்றைப் பொருத்திக்கொள்ளலாம். ஆனால், பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகளில் ஐ.சி.செயலிழந்தால் கணனி போர்ட்டையே மாற்றவேண்டுமாம் - எனக் கூறப்பட்டது.

(எ)

## உரலை உருட்டி சென்றவர் மிதிவெடியில் சிக்கி படுகாயம்!

தென்மராட்சி,ஏப்.7

வீட்டின் அருகே உரலை விடுவதற்காக உருட்டிச் சென்ற வேளையில் அங்கு வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் சரஸ்வதி (வயது 58) என்பவர் தலையிலும் தொடைப் பகுதியிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி குடும்பப் பெண் கடந்த 6 மாதங்களாக இவ்வீட்டில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## யாழ்-முகமாலை இடையில் மினிபஸ் சேவை அதிகரிப்பு

தென்மராட்சி,ஏப்.7

தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம்-முகமாலை பஸ் சேவைகளை அதிகரித்துள்ளது. இதனால் பயணிகள் சிரமமின்றி பயணத்தினை மேற்கொள்ள முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏழு நிமிடத்திற்கு ஒரு மினிபஸ் என்ற ரீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலைக்கு பஸ் சேவை நடத்தப்படுகின்றது. என்றும் -

இதன்மூலம் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் தமது பயணத்தினை சிரமமின்றி மேற்கொள்ள முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் 20 நிமிடத்திற்கு ஒரு பஸ் என்ற ரீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலைக்கு பஸ் சேவையினை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## பிரதமர் - ஜனாதிபதி விரைவில் பேச்சு!

கொழும்பு,ஏப்.7

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும அடுத்துவரும் நாள்களில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்புக்கு முன்னோடியாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துள்ளதாகவும் -

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பேச்சின் முன்னேற்றம் குறித்து இருவரும் ஆராய்ந்ததாகவும் - கூறப்படுகிறது.

பேச்சுத் தொடர்பாக பிரதமருடன் ஜனாதிபதி விரைவில் கலந்துரையாடுவார் என்றும் கதிர்காமர் அப்போது தெரிவித்துள்ளார்.

(ஒ-3-12)

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வெகுஜன அமைப்புத் தலைவர் சூ.சிறில், சிறப்பு விருந்தினர்கள் திருமதி டொறின் ஜீவா, குருநகர் உதவிப் பங்குத்தந்தை வணபிதா க.அருட்செல்வன், யாழ்.கடலோட்டு எந்திரவியல் கல்லூரி அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் உப அதிபர் டொ.செல்ரன் ஆகியோர் ஆரம்ப வைபவத்துக்கு அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-51)



நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளின்போது விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட தங்கவேலு கோடீஸ்வரிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி உப அதிபர் திருமதி சோமசுந்தரம் காணப்படுகின்றார். (எ-15)



மிருசுவில் றோ.க.த. கலவன் வித்தியாலயமும் எழுதுமட்டுவாழ் அ.த.க.வித்தியாலயமும் இணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை வித்தியாலய அதிபர்களான முறையே எவ்.எக்ஸ்.அன்ரன், எஸ்.செல்வச்சந்திரன் ஆகியோர் மைதானத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். (எ)



சுன்னாகம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரமும் படத்தில் காணப்படுகின்றார்.

(எ-155)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1962 - 01 - 30



மறைவு 2003 - 04 - 04

## அமரர் பொன்னையா ஐயாத்துரை முருகானந்தம் B.A.

*(கிராம உத்தியோகத்தர்)*

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு மாற்றலாகி பங்குனி இறுதியில் கடமையை பொறுப்பேற்க இருந்த வேளையில்,

மின்சாரம் தாக்கி அகாலமரணத்தை ஏற்படுத்தி, எம்மிடம் இருந்து முருகானந்தத்தை இறைவன் பறித்துவிட்டான்.

அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*68, பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

துயரில் பங்கேற்கும்
யாழ்ப்பாண மாவட்ட,
(16476) கிராம உத்தியோகத்தர் சங்கம்.


## OFF SET மெஷின் ஒப்பரேற்றர்

OFF SET மெஷின் ஒப்பரேற்றர் உடன் தேவை.
சேவைக்கும் திறமைக்கும் ஏற்ற வேதனம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்**

430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/27191)

## கண்கவரும் கேக் ஐசிங் கண்காட்சி

இடம் :- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய - செயற்பாட்டுக் கூடம்

காலம் :- நாளை (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி

* பிறந்தநாள் கேக் வகைகள்
* திருமண கேக் வகைகள்
* மேலைத்தேய ஐசிங் வகைகள்
* மாச்சீனி மலர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.* (16467) முறைசாராக் கல்விப்பிரிவு மாணவிகள்.

## ஏசியன் கல்வி நிலையம்

மீசாலை

**※ O/L Day Class 2003**

ஆரம்பம் 09.04.2003 புதன்கிழமை காலை 8.00 மணி.

குறிப்பு ★ எமது வழமையான ஆசிரியர் குழாம்.
★ வாராந்த நாள்களில் தினமும் காலை 8.00 - 1.00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.
★ எமது இரு நிறுவனங்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.

(16456) - நிர்வாகி.


# நம்பி வருவோருக்கு நலம் பல நல்கும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

அன்னை வழிபாட்டிற்குரிய சிறப்பு மிக்க ஆலயங்களில் மட்டுவில் பண்டித் தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்று.

தென்மராட்சிப் பெருநிலப்பரப்பில வயலும் வயல்சார்ந்த இடமுமாக விளங்கும் மட்டுவில் பகுதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்ததாக இத்தலம் காணப்படுகிறது.

இங்கு ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் உற்வசம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இத்திருநாளில அம்பாளில் பாதார விந்தங்களை பணிந்து வணங்கி இஷ்ட சித்திகளைப் பெறலாம்.

ஆரம்ப காலத்தில் பனை ஓலையால் வேயப்பட்ட குடிலில் அம்பாள் அமர்ந்திருந்தாள் என வரலாறு கூறுகின்றது. இங்கு ஓலைக்குடிசையில அமர்ந்திருந்த அம்பாளை நாளாந்தம விளக்கு ஏற்றி பூசித்து வந்த பக்தர் ஒருவர் இப்பகுதியில் உள்ள விளை நிலத்தில் விவசாயம் செய்து வந்தார்.

ஒரு தடவை அப்பக்தனின் வயல நிலத்தில் பயிர்களை மாடுகள் மேய்ந்து சேதமாக்கின. இதனைக் கண்ட அந்தப் பக்தர் மாடுகளை விரட்டுகையில் அஙப்பட்டதை எறிந்தார். அதனால் மாடொன்று காயமடைந்து வீழ்ந்து இறந்தது.

செய்வதறியாது திகைத்த அவர் இறந்து கிடந்த மாட்டை தனது வயலி லேயே குழிதோண்டிப் புதைத்தார்.

இதேவேளை மாட்டின் உரிமையாளர் தனது மாட்டிற்கு ஏற்பட்ட கதியை அறிந்து கொண்டார்.

இது தொடர்பாக பஞ்சாயத்து சபையிடம் முறையிடப்பட்டது. இதனால் அப்பக்தர் பயமடைந்தார். அம்பாளிடம் தனக்கு நேரவுள்ள துன்பத்தை முறையிட்டார்.

**தங்கவேல்**
**(சாவகச்சேரி செய்தியாளர்)**

பஞ்சாயத்து சபையில் விசாரணை ஆரம்பமானது - சம்பவம் நடந்த இடம் பஞ்சாயத்து சபையினால் பார்வையிடப்பட்டு மாடு புதைக்கப்பட்ட இடம் மீளத் தோண்டப்பட்டது.

தோண்டப்பட்ட புதைகுழியில் மாட்டுக்குப் பதிலாக பன்றித் தலையுடன் கூடிய உருவம் சபையினரின் கண்ணுக்குப் புலப்பட்டது. நீதியாளர்கள் வியப்பு அடைந்தனர். அந்த அம்பாளின பக்தன் பஞ்சாயத்து சபையிடமிருந்து விடுதலை பெற்றான்.

அன்று தொட்டு இவ் அம்மன் பன்றித் தலைச்சி அம்மன் என அழைக்கப்பட்டு அருள் சொரிந்தவாறு உறைகின்றாள்.

இங்கு உற்சவ காலத்தில் - அடியார்கள் பால் பொங்கல் - நீர்க்கஞ்சி, நீர்ச்சோறு எனப் பிரசாதங்கள் அம்பாளுக்கு நிவேதித்தும், பால்காவடி, பறவைக்காவடி, தூக்குக் காவடி, பூக்காவடி எனக் காவடிகள் எடுத்தும் நேர்த்திகளை நிறைவு செய்வர். இப் புனித பங்குனித் திங்கள் தினத்தில் அம்பாளைப் பணிந்து பணிவோமாக.


## ENGLISH SPOKEN AND GRAMMAR

**BY: BRITTO**

புதிய பிரிவு
திங்கள், புதன் மாலை 3 மணி
(பழைய நேரம்)
ஆரம்பம் :
புதன் 09.04.2003

(C/27189)

## A/L - 2003

பரீட்சைக் கால நூல்!
அளவையியலும் விஞ்ஞான முறையும்
பகுதி II (பின்னிணைப்பு)

**எஸ்.எஸ்.மனோகரன்**

★ 2001, 2002 வினா - விடைகள்
★ குறும் வினா - விடைகள்
★ புதிய விடயங்கள்

விலை 75/-

கிடைக்குமிடம்:
**BEACON** - யாழ்நகர்
(வெலிங்டன் சந்தி)

(16471)


# அயலானை அன்பு செய்!

## தவக்காலச்சிந்தனை

-34ஆம் நாள்-

யதார்த்தமும் மனிதமும் எல்லோருக்கும் சொந்தம். ஏனெனில், கடவுளின சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனிடத்தில் புனிதம் புதைந்துள்ளது. அப் புனிதத்தினை மனிதன் தவறான வழியில் பயன்படுத்துகிறான். அதற்கு மனிதனே உடந்தையாகவும் காணப்படுகின்றான். விஞ்ஞான யுகத்தில் மூழ்கியிருக்கும் இவ்விந்தையான உலகில் விந்தையான விடயங்களிலும், ஆசைகளிலும் மனிதன் பற்றுக் கொண்டவனாக காணப்படுகின்றான். இதனால், பாவம் அவன் மட்டில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

தன் வாழ்வில் எவ்விதமான இலக்கும் அற்றவனாகப் பிறர் விடயங்களில் மிகவும் அக்கறை கொண்டவனாகக் காணப்படுகின்றான். இந்த விடயம் பாராட்டுதற்குரியது என்று எண்ணுகின்றீர்களா? இல்லை பரிதாபப்பட வேண்டியுள்ளது.

காரணம் மற்றவரின் குற்றம் குறைகளைப் பட்டியல் படுத்தும் மனிதர்களே இன்று காணப்படுகின்றனர். இதனால், அவர்களுக்குக் கிடைக்கும் பயன் என்ன? கொலை, கொள்ளை, பகைமை, காட்டிக்கொடுப்புகள், பொறாமை போட்டிகள் போன்றன உருப்பெறுகின்றன. இதனால் மனிதனின் வாழ்வு பாவ அடிமைத்தனத்திற்குள் உறைந்து

**யே.அகுஸ்டதாஸ்**

கிடக்கும் நிலையே காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் இருந்து விடுபட்டு வாழவேண்டும்.

ஆகவே 'உன்னை அன்பு செய்வது போல் உன் அயலானையும் அன்பு செய்' எனக் கடவுளின் வார்த்தை கூறுகின்றது. இதனை மனிதன் மனதில் கொண்டு வாழ்வான் ஆயின் பிறர் மீது குற்றம் சுமத்த ஒருபோதும் துணியமாட்டான். தன்னை இறைவனுக்கு ஏற்புடையவனாக மாற்றிக்கொள்ள முற்படுவான் ★

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்

# நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2003.04.25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் இவ்வலுவலகத்தில அதற்குரிய படிவங்களைப் பெற்று தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

1) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2) இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட இருதடவைக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
3) வயது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4) வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5) நல்ல ஆரோக்கியமும் நன்னடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
6) நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கு அவரால் சேகரிக்கப்படும் பணத்தில் 20% தரகுப்பணமாக வழங்கப்படும்.
7) இவர்கள் சபையில் தற்காலிக/நிரந்தர நியமனங்கள் கோரமுடியாது.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம என்னும் முகவரிக்கு மேற்குறித்த திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 4.4.2003.

(சி-27182)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா காமாட்சி

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா காமாட்சி 05.04.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் மகேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, கச்சாய் அ.த.க.பா.) அன்புத் தாயாரும சின்னத்துரை கந்தசாமியின் (வடலியடைப்பு) அன்பு மாமியாரும் மதிவதனி (சுவிஸ்), மனோரமணன், அகிலானந்தன், இந்திரன், கண்ணன், உருத்திரா தேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (07.04.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*'வள்ளி வாசா'*
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

(16472)

தகவல்:
திருமதி மகேஸ்வரி கந்தசாமி
(மகள்)


## மங்களகரமான திறப்புவிழா

தென்மராட்சி இசைப்பிரியர்களுக்கு! சங்கத்தானை சாவகச்சேரியில்!

புதிய, பழைய பக்தி, சினிமாப் பாடல்களைச் சிறந்த முறையில் கொம்பெக் CD க்கள் மூலம் பதிவு செய்து பெற்றுக்கொள்ள....

## நியூ அலையோசை ஒலிப்பதிவுக் கலையகம்

எனும் ஸ்தாபனத்தை



இன்று (7.4.2003) திங்கட்கிழமை நண்பகல் 11 மணிமுதல் 1 மணிவரையுள்ள சுபவேளையில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும மகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

(16454)

உரிமையாளா
க.ஜெயசீலன் (நந்தன்)

# மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனி மாதம் 24 ஆம் திகதி இன்று (07.04.2003) திங்கட்கிழமை காலை 6.08 - 6.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

இல. 42, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில்

## கே.வி.ஆர் சென்ரர்ஸ்

## K V R Centers

*Importers - General Merchants & Transport Agents.*
*Dealers in CIC Paints - Ceylon Cold Stores & Building Materials.*

என்னும் ஸ்தாபனம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை தங்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அபிமான வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*
கே.வி.ஆர்.சென்ரர்ஸ்
ஸ்தாபனத்தார்.

(C/27188)

---



உ
ஐயனார் துணை

## அராலி கிழக்கு, மலையாளங்காடு பூரண புட்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

நவக்கிரக நாயகர்கட்கு அத்திவாரக்கல் நடும் வைபவம் இடம்பெறும்

*தலைவர்* :- திரு.க.திருச்சிநாதன் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை
*காலம்* :- இன்று (2003-04-07) திங்கட்கிழமை
*நேரம்* :- முற்பகல் 7.08-8.33 மணி வரை

அத்திவாரக்கல் நடுபவர்
**மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்**
*இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர்*
**சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக்குருக்கள்**
**சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள்**
*தலைவர், சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்*
**பிரம்மஸ்ரீ சோ.இலட்சுமிநாராயண சர்மா**
*மேற்படி ஆலய நித்திய பூசை அருட்சகர்*

அடியவர்கள் யாவரும் வந்து கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(16462) - மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை

---

## முதலாம் வருட திருமணநாள் வாழ்த்துக்கள்



"சித்திராலயம்" அல்வாய் வடக்கைச் சேர்ந்த

## யூறிசன் - சுதர்சினி

தம்பதிகள் தமது முதலாம் வருட திருமண நாளை இன்று 07.4.2003 சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துபவர்கள்.

அப்பா, அம்மா, மாமா, மாமி, சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

(16468)

---

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3544970 இருந்து 3563311 வரை
சீட்டிழுப்பு இல. 1390
திகதி 05.04.2003

**வெற்றி எண்கள்** 01 16 40 48 56

**போனஸ் எண்** 29

ஜக்பொட் பரிசு

**ரூபா.3,314,350/-** வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,314,350/- | 3,314,350/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 105 | 10,000/- | 1,050,000/- |
| 3 | 5,785 | 500/- | 2,892,500/- |
| 2 | 96,346 | 20/- | 1,926,920/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 117,991 | 10/- | 1,179,910/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,363,680/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 1,500,000/-**

தொடர் இல. 2561275க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 09ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3547588-9-72
3545404-6-40
3545858-2-89
3553427-5-90
3546341-5-97

வளமான வாழ்வு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

---

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 463 |
| திகதி | 04.04.2003 |

| டிக்கட்டின் நிறம் -சிவப்பு |
|---|
| செல்லுபடியாகும் தொடர் இல. 5840462-5855212 |

வெற்றி இலக்கங்கள் 11 31 47 48

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு
ரூபா. 2,452,850/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,180,800/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 325,993 | 10 | 3,259,930 |
| 2 இலக்கங்கள் | 29,963 | 20 | 599,260 |
| 1 இல + லக்கினம் | 29,620 | 30 | 888,600 |
| 2 இல + லக்கினம் | 2,699 | 100 | 269,900 |
| 3 இலக்கங்கள் | 791 | 500 | 395,500 |
| 3 இல + லக்கினம் | 79 | 5,000 | 395,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,452,850 | - |
| மொத்தம் | 389,149 | - | 6,208,190 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,208,190/-

தொடர் இல. 4863239க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 08ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5841258-4-61
5849498-8-30
5852108-4-67
5841608-0-93
5845524-2-83

வளமான வாழ்வு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

ஓம் நமோ நாராயணா



# மீண்டும் சாவகச்சேரியில்



# மணி ஜுவெல்லர்

இணை நிறுவனம்

# ஈசன் ஜுவெல்லறி

இன்று (07.04.2003) திங்கட்கிழமை பகல் 11.00 - 12.00 வரையுள்ள சுபவேளையில் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற கட்டடத்தில் மீண்டும் எமது ஸ்தாபனம் இயங்கி வரும் என்பதனை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.



கிளை நிறுவனம்:

மணி ஜுவெல்லர்

இணை நிறுவனம் ஈசன் ஜுவெல்லறி

பிரதான வீதி, சங்கானை

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்
தரம், நம்பிக்கை, நாணயம் என்பவற்றின் தாரக மந்திரம். (16457)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 - 04 - 1966 |  | 09 - 03 - 2003 |

### அமரர் ஆறுமுகம் செல்வானந்தராஜா

ஜேர்மனியில் காலமான எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து 08.04.2003 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சி.ஆறுமுகம் (தகப்பன்-சுன்னாகம்)
சகோதரர்களும்
மைத்துனர்களும்.

*சிவன் கோவிலடி,*
*இருபாலை, கோப்பாய்.* (16428)


## வேலை ஆள்கள் தேவை

. ரீ மேக்கர், ரீ சப்ளையர் (ஆண்கள்), சமையல் தெரிந்த பெண்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுவிஸ் விருந்தகம்
(16455) 352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை

## மங்களகரமான திறப்பு விழா வாழ்த்து



இந்து கலாசார அமைச்சர் கௌரவ

**தி.மகேஸ்வரன்**

அவர்களின் அயராத முயற்சியின் பயனாக, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை இன்று திறக்கப்படுவதை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



யாழ்.செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி காரைநகர் பிரதேச உதவி அரசாங்க அதிபராகப் புதிதாக பதவி ஏற்கும்

**திரு.வே.சாம்பசிவம்**

அவர்களை வருக வருகவென வரவேற்கின்றோம்.



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி எமது காரைநகர்ப் பிரதேசத்திற்கு அளப்பரிய சேவையாற்றிய உதவி அரசாங்க அதிபர் **திரு.ஜே.எக்ஸ்.செல்வநாயகம்** அவர்களையும் அவர் தம் சேவையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/27183) காரைநகர் வடகிழக்கு, மக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 - 12 - 1937 |  | 08 - 03 - 2003 |

### அமரர் சின்னையா துரைசிங்கம்

(ஓய்வு பெற்ற மாநகர சபை சாரதி)

பண்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே!
ஆதரிக்க ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அப்பா என
அழைக்க நீங்கள் இல்லையே!

இன்று (07-04-2003) திங்கட்கிழமை நண்பகல், அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இருபாலைச் சந்தி.* (16463) தாய், மனைவி, பிள்ளைகள்.




சுகமான சுமையற்ற சைக்கிள் சவாரிக்கு

D.S.Iயின் அறிமுகம்

# D.S.I. விற்பனை முகவர்

இல. 253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(ஸ்ரீதர் திரையரங்கு அருகில்) (C/27187)


## பாஷாண, உத்வாசன, சபிண்டீகரண அழைப்பு

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் பாதார விந்தத்தில் |
|---|---|---|
| 09 - 08 - 1986 |  | 29 - 03 - 2003 |

பேரன்புடையீர்!

சித்திரபானு வருடம் பங்குனித் திங்கள் 15ஆம் நாள் சனிக்கிழமை சிவப்பதப்பேறு எய்திய எமது கனிஷ்ட புதல்வன்

### செல்வன் த.பிரகாஷ்

அவர்களின் பாஷாண (கல்லெடுப்பு) உத்வாசனம் 08. 04. 2003 பங்குனி 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பகல் 10மணியளவிலும், 09. 04. 2003 புதன்கிழமை பகல் 10 மணியளவில் சபிண்டீகரணம் (சமாராதனை) முதலான கிரியைகளும் எமதில்லத்தில் நடைபெறும். இவ்விரு தினங்களில் நடைபெறும் கிரியாதி வைபவங்களில் பங்கு பற்றி அமரர் பிரகாஷ் அவர்களின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்தனை செய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*"அன்னை இல்லம்"*
*வன்னிச்சி அம்மன் கோவிலடி,*
*வல்வெட்டித்துறை.*
*T.P. 070 212267*
*021 2263185* (16461)

சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகரும் குடும்பத்தினரும்.

# மிதிவெடி பற்றிய தகவல்தர விவசாயிகளுக்கு படிவங்கள்

சண்டிலிப்பாய்,ஏப்.7

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனம், பண்டத்தரப்பில் மிதிவெடி அபாயம் உள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு மிதிவெடி மற்றும் வெடிக்காத இராணுவப் பொருள்கள் பற்றிய தகவல் படிவங்களை வழங்கி வருகின்றது.

யாழ். மாவட்ட மிதிவடி செயற்பாட்டு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட இப்படிவத்தை இச்சம்மேளனம் பெற்று சம்பந்தப்பட்டவர்களுககு விநியோகித்து வருகின்றது.

பண்டத்தரிப்பு - பெரியவிளான் பகுதியில் முன்னர் இராணுவத்தினர் அமைத்திருந்த மண் அணைச் சுற்றாடலில் உள்ள வயல் காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

இதுவரை இவை அகற்றப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இப்பகுதியில் மிதிவெடிகளில் சிக்கி சிலர் கால்களை இழந்துள்ளனர். மேய்ச்சலுக்குச் சென்ற ஆடு, மாடுகளும் படுகாயமடைந்துள்ளன.

இதன காரணமாக பல விவசாயக் காணிகளும் செய்கை பண்ணப்படாது தரிசாக இருந்து வருகின்றன.

இந்த மிதிவெடி தகவல் அறிக்கை படிவத்தை பெறவிரும்பும் இப்பகுதி விவசாயிகள் தம்மிடம் தொடர்பு கொண்டு பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளன தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (ஐ-135)

# சைவப் புலவர் சங்கத்தின் பரிசளிப்பு விழா நேற்று

யாழ்ப்பாணம்,ஏப்.7

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுக் காலை வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதமவிருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தவருடம் நடத்தப்பட்ட சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பட்டங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் மகேஸ்வரன், வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்துக்கு கணனி ஒன்றையும், 'பாண்ட்' வாத்திய இசைக்கருவிகள் சிலவற்றையும் அன்பளிப்பாக வழங்கினார். (ஐ-4)

## திருமண நல்வாழ்த்து

மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனி 24ஆம் நாளாகிய இன்று (07.04.2003) திங்கட்கிழமை திருமண வாழ்வில் இணையும்

திரு.திருமதி கணேஷானந்தன் சதுஷ்ரதி தம்பதிகளை

இல்லற வாழ்வில் பதினாறும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்கள்:-
திரு.திருமதி சாமி ஜீவானந்தன் ஜானகி,
திரு.திருமதி சிவகுமார் கீதநந்தினிரேவதி,
திரு.திருமதி பிரகதீஸ்வரன் கலா, திரு.பாலகுகன் ஆராத்தியா.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(16483)

## ஆன்மீகமும் பக்தி நிலையும்

ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு 'ஆன்மீகமும் பக்தி நிலையும்' எனும் பொருள் பற்றி தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள ஸ்ரீ கல்கி பகவானின் சீடர் ஸ்ரீ ராஜேஸ் பகவத் தாஸா என்பவரினால் சொற்பொழிவு நடைபெறும்.

**இடம்** :- ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய முன்றில் *(நாச்சிமார் கோவிலடி)*
**காலம்** :- இன்று (07.04.2003) திங்கட்கிழமை
**நேரம்** :- பிற்பகல் 7.30 (ப.நேரம்)

அனைவரும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

- ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.

விளம்பர உதவி:-

கவியரசு நகைப் பூங்கா
(இரத்தினக்கல் வியாபாரம்)
196, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கவியரசு நகைத்தொழில ஆயுத விற்பனை அகம்
கிளை - 957, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

வேணுகா தொலைத் தொடர்பு நிலையம்
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவை,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
2541, 2845, 5689, 5076
964, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி.
(C-27194)

பொது சாதாரண பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
T.தவசேகர்

| நிலையம் | இடம் | ஆரம்பம் |
|---|---|---|
| DMI | ஆரியகுளம் | 07.04.03 - 3.00மணி |
| கிறிஸ்ரல் | நெல்லியடி | 11.04.03 - 1.00மணி |
| சுப்றா | சித்தன்கேணி | நேர அட்டவணை அலுவலகத்தில் பெறவும். |
| ஞானோதயா | சாவகச்சேரி | நேர அட்டவணை அலுவலகத்தில் பெறவும். |

(16435)

## இளநீர் வெட்டிய கத்தி பெருவிரலை துண்டாடியது

தென்மராட்சி,ஏப்.7

இளநீர் வெட்டிய கத்தி கைப் பெருவிரலை வெட்டித் துண்டாக்கிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த தர்மராசா ஜீவராசா (வயது 18) என்பவரே இவ்வாறு பெருவிரலை இழந்துள்ளார். இவர் தற்போது காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (எ-117)

## தாகத்தில் தவித்தவர் 'அசிட்'நீரை குடித்தார்!

கொளுத்தும் வெயிலில் வந்தவர் பற்றரிக்கு விடுவதற்காக வைக்கப்பட்டிருந்த 'அசிட்' கலந்த தண்ணீரை அருந்திய சம்பவம் கடந்த புதன்கிழமை உதயசூரியன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த நாகன் மாணிக்கம்(வயது-34) என்பவரே அசிட் கலந்த தண்ணீரைக் குடித்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

## மரக்கறி விலை வீழ்ச்சி!

பண்டத்தரிப்பு மற்றும் சங்கானை சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

தற்போது இந்தச் சந்தைகளில் ஒருகிலோ கத்தரிக்காய் எட்டு ரூபா தொடக்கம் 10 ரூபாவாகவும், பயற்றங்காய் 20 ரூபாவாகவும், பாகற்காய் 25 ரூபாவாகவும், வெண்டிக்காய் 15 ரூபாமுதல் 20 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

இதேவேளை -

எலுமிச்சம்பழத்தின் விலையும் மிகவும் குறைந்துள்ளது. (ஐ-135)

A/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு
விசேட Logic கருத்தரங்கு
New Science College
(கன்னாதிட்டி, யாழ்நகர்.)
காலம் - 09.04.03
(9.00 a.m.)
By-S.R.J.சுதன்,
P.கமல்,
Note:- வினா தொகுப்புகள் வழங்கப்படும்.
(16482)

கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள 7 ஸ்ரீ இலக்கமுடைய ஒஸ்ரின் (Austin) மினிமொக் (Mock) கார் உடன் விற்பனைக்கு.
தொடர்பு :- 0777 744476
021 - 222 5625
(16484)

புதுக்கடை திறப்பு விழா
காலம்: இன்று (07.04.2003)
தமிழ் வீடியோ
புகையிரத வீதி,
மல்லாகம்.
ஓடியோ, வீடியோ பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.
புகையிரத வீதி, மல்லாகம்.
உரிமையாளர் இராசையா சசிக்குமார்
(16481)

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஸ்நேகா, ரகுவரன் நடித்த
வசீகரா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நேரம்)

லக்ஷ்மி இணுவில்
அர்ஜுன், மீனா, ரம்பா, ஆனந்தராஜ் நடித்த
செங்கோட்டை
தினசரி 11.00, 3.00, 7.00 (பி.நேரம்)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.7

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் புதுவருட தினத்தன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.வண்ணை ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் ஆலய மகாலஷ்மி பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.45 மணி தொடக்கம் 7.15 மணிவரை நடைபெறும்.

காலை 5.30 முதல் யாகபூஜை, பூர்ணாகுதி, தீபாராதனை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம் என்பன இடம்பெறும். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 22 ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை விழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு யாக பூசையும், பி.ப. 2 மணியில் இருந்து திருநெறிய தமிழ் இசை உரையும், மாலை 4 மணிக்கு குருமுதல்வரின் திருவுருவப்பட ஊர்வலமும் இடம்பெறும். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 11 தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

14 ஆம் திகதி தேர் உற்சவமும், மாலை 5 மணிக்கு தீர்த்த உற்சவமும், மறுநாள் சங்காபிசேகமும் நடைபெறும். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராண படனத்தில் இன்று காலை 7 மணி முதல் 'சூரபத்மன் வதைபடலம்' இடம்பெறும் மாலை 5 மணிக்கு விசேட பூசை நடைபெறும். (எ)

# விடுமுறை கால வகுப்புக்கள்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் முதலாம்தவணை விடுமுறை காலங்களில் விசேட வகுப்புகள் நடைபெற உள்ளன.

கடந்த காலங்களில் கற்பிக்கப்படாதுள்ள பாடங்களை கற்பித்து முடிப்பதற்கும், மாணவர்கள் பாடங்களில் விசேட அறிவைப் பெற்றுக்கொள்ளவும் விடுமுறைகால வகுப்புகள் உதவி புரியும் என நம்பப்படுகின்றது.

விடுமுறை காலங்களில் வகுப்புகளை திட்டமிட்டு ஒழுங்குபண்ணி நடத்துமாறு வலிகாமம் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்; பாடசாலை வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதியும் வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து விடுமுறை கால வகுப்புகளை நடத்துவதற்கு பாடசாலை அதிபர்கள் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-152)

I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES
I.T.N. இன்
புதுவருட மாபெரும் மலிவு விற்பனை
புதுவருடத்தை முன்னிட்டு
இன்று (07.04.2003) திங்கள் முதல் 14.04.2003 புதுவருடம் வரை,
இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள், புதிய, பழைய தமிழ் சினிமாப் பாடல்கள் மற்றும் MP - 3 கர்நாடிக் CDகள் அனைத்தும்
மாபெரும் மலிவு விலையில்.....
'உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்'
I.T.N. வீடியோ, ஓடியோ, மியூசிக் சென்றர்
305, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.
(16478)
I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் சின்னப்பு கந்தசாமி

*(செட்டியார் - V.S.கந்தசாமி - முன்னாள் பண்டகசாலைப் பொறுப்பாளர், மாதம்பை, இறக்குவானை)*

04.04.2003 வெள்ளிக்கிழமை காலஞ்சென்ற அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04.2003) திங்கட்கிழமை மு.ப.9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்துக்குத் தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டப்பாதி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

(சி-27193)

தகவல்:
க.செல்லம்மா (மனைவி),
மக்கள்.

## துரையப்பா துரைச்சாமி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா துரைச்சாமி அவர்கள் நேற்று (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் நவரெட்ணம் (கனடா), காலஞ்சென்றவர்களான கனகமணி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரரும் சந்திரகுமார் (அபிராமி அரைக்கும் ஆலை, யாழ்ப்பாணம்), சூரியகுமார், உதயகுமாரி, இதயகுமார் (ஜேர்மனி), விஜயகுமாரி, வசந்தகுமாரி (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்), நந்தகுமாரன் ஆகியோரின் தகப்பனாரும் லதா, கீதப்பிரியன், ஞானசேகரம், மகேந்திரராஜா, தேவி, ராகினி, சுபாசினி, யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும் துசி, தனு, அபி, கஜா, வக்சி, கபூரன், சிந்துஜன், துஷ்யந்தன், உஷா, தஜி, கபூர், தனு, விது, அபிரா, அஸ்விகா, அட்சயா, தாரணன், தாரணி, லாவண்யா ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

(16485)

தகவல்
சந்திரகுமார்
(மகன்)

# ஈராக் போரை உதாரணம் காட்டி பாகிஸ்தான் மீது நடவடிக்கையா?

## கூடாது என புதுடில்லிக்கு அமெரிக்கா அறிவுறுத்து

வாஷிங்ரன்,ஏப்.7

ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் தாக்குதல் நடத்துவதை உதாரணம் காட்டி பாகிஸ்தான் மீது இந்தியா நடவடிக்கை எடுக்கக்கூடாது என புஷ் நிர்வாகம் கூறியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கான காரணம் வேறு. இந்தியா பாகிஸ்தான் இடையே நீண்ட நாள்களாக இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினை வேறு. இரண்டையும் ஒப்பிட்டுப் பேசுவது தவறானதாகும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை பெண் அதிகாரி ஜோன் புரோகோபோவிக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலை உதாரணங்காட்டி, பாகிஸ்தான் மீது இந்தியா நடவடிக்கை எடுக்கமுடியும் என்ற சாரப்பட வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, வெள்ளிக்கிழமை கருத்து கூறியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் அந்த பெண் அதிகாரியின் பேச்சு இருந்தது.

ஐநாப்பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்று செயற்பட ஈராக் மறுத்ததாலேயே அதன் மீது அமெரிக்கா மற்றும் கூட்டணிப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஆனால், அதை இந்தியா தனது செயலுக்கு முன்னுதாரணமாகக் கருத முடியாது.

காஷ்மீர் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அமெரிக்கா உணர்ந்துள்ளது. சமீபத்தில் அங்கு நடந்த படுகொலைக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாக கண்டனம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது - என்றார் ஜோன். (ஐ)

# அணு குண்டைத் தாங்கிச் செல்லும் 'அக்னி - 3' ஏவுகணை இந்த ஆண்டு

புதுடில்லி,ஏப்.7

அணுகுண்டைத் தாங்கிச் செல்லும் 'அக்னி - 3' ஏவுகணைச் சோதனையை இந்த ஆண்டில் நடத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

தரையில் ஓர் இலக்கிலிருந்து மற்றுமோர் இலக்கை சென்று தாக்கும் ஆற்றல் கொண்டது 'அக்னி - 3' ஏவுகணை என்றும் அவர் சொன்னார்.

'அக்னி - 1', 'அக்னி - 2' ஏவுகணைகள் ஏற்கனவே இந்தியா வசம் உள்ளன. 'அக்னி - 2' ஏவுகணையை விட அதிக தொலைவில் உள்ள இலக்கைச் சென்று தாக்கக் கூடியதாக 'அக்னி - 3' ஏவுகணை இருக்கும்.

'அக்னி - 3' ஏவுகணை சோதனைக்கான நாள் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் இந்த ஆண்டிலேயே இந்தச் சோதனையை நடத்த அனைத்து முயற்சிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏவுகணைகள் சோதனை நடத்துவதும் அவற்றைப் படையில் இடம்பெறச் செய்வதும் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டே ஆகும். இது குறித்து வெளிநாட்டு விமர்சனங்களை கருத்திற்கொள்ள வேண்டியதில்லை. அண்டை நாடு ஏவுகணைகள் சோதனையை நடத்திக்கொண்டிருக்கும் போது நாம் சிறிதும் அசட்டையாக இருந்துவிடமுடியாது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக செலவிடப்படும் தொகையை வீண் செலவு என்று யாரும் கருதக்கூடாது. நாட்டின் பாதுகாப்பு விடயங்களில் மெத்தனமாக இருக்கவோ, சமரசம் செய்துகொள்ளவோ முடியாது.

தரையிலிருந்து விண்ணில் சென்று தாக்கும் திரிசூல் ஏவுகணை தயாரிப்பிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். அக்னி, பிருத்வி ஏவுகணைகள் தவிர்த்து இந்திய, ரஷ்ய கூட்டுத் தயாரிப்பான 'பிரம்மோஸ்' ஏவுகணை சோதனையின் வெற்றியும் குறிப்பிடத்தக்கது.

இந்திய விமானப் படைக்கு அதிநவீன ஜெட் பயிற்சி விமானங்கள் வாங்குவதில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் தொடர்பு கொண்டுள்ளன. இதில் இறுதி முடிவு அடுத்த நான்கு அல்லது ஐந்து மாதங்களில் எடுக்கப்படும் என்று நம்புகின்றேன் என்றார் பெர்னாண்டஸ். (ஐ)

# கூட்டணி எம்.பிக்கள் ஒன்றாக தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்

வவுனியா,ஏப்.7

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை உட்பட பல விடயங்கள் குறித்து கூட்டணி எம்பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் ஆலோசனை நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-164)

## வெடிவிபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜுவ மரியாதையுடன் கொடிகாமம் நினைவு மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும். தொடர்ந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு உருவப்படம் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். (ஐ-9)

## 'சார்ஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கா விமான நிலையத்திலும் கொழும்பு துறைமுகத்திலும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் கொழும்பு துறைமுகத்திலும் இந்நோய் தொற்றிய இருவர் கண்டுபிடிக்கப்பட்டனர். ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டவர் மற்றையவர் ஜப்பானியர்.

இவர்கள் இருவரும் மருத்துவ பரிசோதனைக்காக உடனடியாக அங்கொடை தொற்றுநோய் தடுப்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

இருப்பினும், சில மணிநேரம் வைத்தியசாலையில் தங்கியிருந்த அவ்விருவரும் தமது விருப்பத்தின்படி அங்கிருந்து வெளியேறி விட்டனர். அவர்கள் இருவரும் தங்கள் நாடுகளுக்கு திரும்பிவிட்டனர் எனக் கூறப்படுகிறது. (ஐ-9)

# காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான - குழுவே இந்த விசாரணைகளை நடத்துவதற்காக இங்கு வருகைதரவுள்ளது.

விசாரணைகள் 15ஆம், 17ஆம் திகதிகளில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் - 16ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

விசாரணைகளுக்கு அழைக்கப்படுவோருக்கு கடிதங்கள் தனித்தனியாக தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற 3 ஆம் கட்ட விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கே மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் -

தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இந்த விசாரணை கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் நடைபெற, முன்னர் ஏற்பாடாகி இருந்த போதிலும் விசாரணைக்குழு வருகைதராத காரணத்தால் விசாரணைகள் நடைபெறவில்லை. (ஐ-5)

# 'லங்கா முடித'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கியதில் அவர்களின் 'டிங்கி' ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால், காயமுற்ற மூவரில் இருவருக்கே சூட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. மற்றொருவர் கப்பலுக்குள் விழுந்ததில் காயமடைந்தார்.

கப்பலில் பயணஞ்செய்த படையினரின் துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடித்ததில் மற்றைய சிப்பாய்கள் இருவர் காயம் அடைந்திருக்கலாம் என்று கருதப்படுவதைப் புறந்தள்ள முடியாது.

அதேவேளை, படையினர் திருப்பித் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தில் 'டிங்கி' மூழ்கடிக்கப்பட்டதை யாரும் காணவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கப்பலில் இருந்த படையினர் 50 கலிபர் துப்பாக்கிகளாலும் இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளாலும் திருப்பித் தாக்கியுள்ளனர். ஆனால், அந்தத் தாக்குதலுக்கு இலக்கு என்னவென்பதே கேள்வி.

- இப்படி அத்தாஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்திய மத்திய அமைச்சர் சாந்தகுமார் இராஜினாமா!

புதுடில்லி,ஏப்.7

இந்தியாவில் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சாந்தகுமார் ஞாயிறன்று தனது அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்ட பிரதமர் வாஜ்பாய், குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு அனுப்பி வைத்தார்.

சாந்தகுமார் கவனித்து வந்த ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற அபிவிருத்தித் துறை அமைச்சர் அனந்த்குமாரிடம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

ஹிமாசலப் பிரதேசத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலின் போது, சாந்தகுமார் தெரிவித்த கருத்துக்களை அடுத்து, அவர் மீது பா.ஜ.க. மேலிடம் அதிருப்தி கொண்டிருந்தது.

அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதாகத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு உட்பட தலைவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு இரு தினங்கள் அறிமுக வகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.மாவட்டத்தில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாற்பது கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான அறிமுக வகுப்பு நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்த வகுப்புக்கள் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட (யு.என்.டி.பி.) நிறுவனத்தினின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றது.

புதிதாகச் சேர்த்துக் கொண்ட கூட்டுறவுப் பரிசோதகர்களுடன் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்கள் மற்றும் அபிவிருத்தி கணக்காய்வுப் பகுதிகளைச் சேர்ந்த சகல கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகியோரை இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (ஐ-17)


ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
A/L 2005
கலை. வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்.
காலம் : 12.04.2003 (6.30a.m.)
(16417) - நிர்வாகி.

O/L DAY CLASS
பிரிவு I ஆரம்பம்:
09.04.2003
புதன் காலை 8.30
"SUPER GRADE"
ஆசிரியர் குழு
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.
(16479)

NEW SCIENCE COLLEGE
Physics
2005 பொறியியல்
செவ். வியா. - 5.00 - 6.00 p.m.
ஆரம்பம் :
8.4.2003 (செவ்வாய்)
By: R.குகன் B.Sc.
(16465)

NIRU TUITION CENTRE
Station Road - Kondavil
PHYSICS
A/L 2004
PAPER CLASS
ஆரம்பம் : 08.04.2003
(செவ்வாய் 3.30 p.m.)
திரு. S.சோதிலிங்கம்
(16480)

புதுவருட மலிவு விற்பனை
புதியரக சூட்டிங்குகள் { 350 - 200 / 450 - 350
எம்மிடமே சூட்டிங் எடுத்துத் தைப்பவர்களுக்கு
தையற் கட்டணத்திலும் அதிவிசேட சலுகை
CITY TEX & TAILORS
(Specialist in Wedding Coats & Sutts)
73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (16473)

சித்திரைப் புத்தாண்டின் சிறப்புத் தள்ளுபடி
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளுக்கும்
INTERNET BROWSING
செய்துகொள்ள
விசேட சலுகைக் கட்டணத்தில்
ஏப்ரல் 07 முதல் – ஏப்ரல் 13 வரை.
மேலும் விவரங்களுக்கு:
SRI MURUGAN
Tele Communication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna
T.P. 021 - 222 2670, 021 - 222 3588
Fax: 021 - 222 3214
E - mail del-smskr@eureka.lk
(16385)


## காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை
## திறப்பு விழா அழைப்பு

மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களின் பணிப்புரைக்கு அமைய உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சினாலும், வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆளுநராலும் அங்கீகரிக்கப்பட்ட காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான உதவி அரச அதிபர் பணிமனை இன்று (07.04.2003) திங்கட்கிழமை பகல் 11.00 - 12.00 மணி வரையான சுபவேளையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான,

கௌரவ தியாகராசா மகேஸ்வரன்

அவர்களால் வைபவரீதியாக திறந்துவைக்கப்படவுள்ளது. இந்த வைபவத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
(சி-27195)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.